# சமூக அறிவியல் II

## வகுப்பு IX

SOCIAL SCIENCE II
STD 9
TAMIL MEDIUM

பகுதி-2
Part-2

கேரள அரசு
கல்வித்துறை

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT),கேரளம்
2016

KT-535-1/Soc. Sci. II-9 (T) Vol-2

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா,
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா,
விந்திய ஹிமாசல யமுனா கங்கா,
உச்சல ஜலதி தரங்கா,
தவ சுப நாமே ஜாகே,
தவ சுப ஆசிஸ மாகே,
காகே தவ ஜய காதா
ஜனகண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா.
ஜய ஹே, ஜயஹே, ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு . இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தோர்.எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம்வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமை கொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்து கொள்வேன்.என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.நான் எனது நாட்டினுடையவும், நாட்டு மக்களுடையவும் வளத்திற்காகவும், இன்பத்திற்காகவும் முயற்சி செய்வேன்.

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695 012, Kerala
*Website* : www.scertkerala.gov.in, *e-mail* : scertkerala@gmail.com
Phone : 0471 - 2341883, Fax : 0471 - 2341869
Typesetting and Layout : SCERT
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of Education, Government of Kerala

அன்பார்ந்த மாணவர்களே,

நாம் வாழும் புவியிலுள்ள வேறுபாடுகளைப் பற்றிய ஒரு முழு பார்வை ஐந்து முதல் எட்டு வரையுள்ள வகுப்புகளில் புவியியல் தொடர்பான பாடங்களைப் படித்ததனால் உங்களுக்குக் கிடைத்திருக்கும். ஒன்பது, பத்து வகுப்புகளில் புவியியல் தொடர் பான பாடங்களில் எதனால் இத்தகையை வேறுபாடுகள் புவியில் காணப்படுகின்றன என்ற தேடல் காணப்படுகிறது. இத்தகைய தேடல் கள் அதிக அறிவைப் பெறுவதற்கும், கூடுதல் தேடல்களுக்கும் ' நமது புவியைப் பாதுகாக்க வேண்டும்' என்ற உறுதிமொழிக்கும் நம்மை வழிநடத்துகிறது. அன்றாட வாழ்க்கைக்கும் பொருளாதார வியலுக்குமுள்ள தொடர்பைப் பற்றிய கல்வி இக்கால உலகில் வாழ் வதற்கு உங்களைத் தகுதியுள்ளவர்களாக்குகிறது. இதற்காகப் பொரு ளாதாரவியலில் பல்வேறு கருத்துகள் பாடப்புத்தகத்தில் சேர்க்கப் பட்டுள்ளன. விமர்சனக் கண்ணோட்டம், தொடர்ச்சியான தேடல் கள் மற்றும் கற்றல் செயல்பாடுகள் அறிவுக் கண்களைத் திறக்க உதவுகின்றன. வருங்கால சிறந்த குடிமக்களாக வாழ இப்பாடப்புத் தகம் உங்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாகட்டும் .

வாழ்த்துக்களுடன்

**முனைவர். பி. ஏ. பாத்திமா**
இயக்குநர்
எஸ். சி. இ. ஆர். டி.

# TEXT BOOK COMMITTEE

**Participants**

**Vargheese Bothan** HSST, St. Johns HSS Mattom, Mavelikarai
**Naushad P.P.** HSA, GHS,Kannadi, Palakkad
**Kribalaji K** HSA, VIM HSS Vadavannur, Palakkad
**Sasidharan. K** HSA, GHS Malampuzha, Palakkad
**Jobi manuel** HSA, Nirmala HS, Thariyodu,Wyanad
**Dr. Priyesh,C.A** Asst. Prof. Dept.Of.Econ. University College, TVM
**Unnikrishnan. U.** HSST, Govt.HSS Venjaramudu,TVM
**Dr.Joemon Mathew** Asst.Prof. Dept. of. Eco, University Collage,TVM
**Nishanth Mohan.M.** HSST, Govt. Tamil.HSS, Chalai,TVM
**Vijayakumar.C.R.** HSST, Govt. HSS Miruthamala, TVM
**Yoosuf Chandramgandhi** HSST, Govt HSS,Pallikunnu,Kannur
**Sujamon. S. HSA** HSST, PNMGHSS.Kunthallur, Chirayankeezh
**Manoj.K.V.** Research Officer, SCERT

**Experts**

**Martin Patrick.** Asst. Prof (Rtd) Dept. of Econ. Maharajas College, Ernakulam
**I.P.Joseph** Asst..Prof (Rtd) SCERT
**Muralidara. S.** Asst. Prof. (Rtd). Dept. Of. Econ. Maharaja College, Ernakulam

**Acadamic Co-Ordinator**

**Chitra Madhavan** Research Officer, SCERT

---

**TAMIL VERSION**

**S. Padmakumar.** HSA, GHS Koovakkadu, Kollam
**Mary Stella Rosaline. K.** HSA (Rtd) GGHSS, Karamana,Tvpm.
**I. Unnikrishnan.** HSA, IGMMRS, Nilambur, Malappuram.
**Dr. Nisha Raffi.** Asst. Prof. in Tamil, University College, Palayam, Tvpm.

**Acadamic Co-Ordinator**

**Dr. D. Sahayadhas** Research Officer, SCERT

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 6 | பொருளாதார வளர்ச்சியும் முன்னேற்றமும் | 95 |
| 7 | பாதுகாப்பான நாளைக்கு | 107 |
| 8 | மக்கட் தொகை, குடியேற்றம், குடியிருப்புகள் | 123 |
| 9 | பொருளாதார அமைப்புகளும் பொருளாதாரக் கொள்கைகளும் | 143 |




## இந்தப் புத்தகத்தில் கற்றலை எளிமையாக்குவதற்கு சில அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன


கூடுதல் வாசிப்பதற்கு- மதிப்பீடு செய்வதற்கு சேர்க்க வேண்டாம்


கற்றல் மேம்பாட்டைத் தீர்மானிக்கும் வினாக்கள்


செயல்பாடுகள்


முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை


மதிப்பீடு செய்வோம்


தொடர் செயல்பாடுகள்



6

# பொருளாதார வளர்ச்சியும் முன்னேற்றமும்

பொருளாதார அமைப்பைக் குறித்து நாம் முன்னரே விவாதித்தோம் அல்லவா? ஒரு பொருளாதார அமைப்பில் உருவாகும் மாற்றங்களை நீங்கள் கவனித்தி ருக்கிறீர்களா? ஒரு நாட்டின் வேளாண் உற்பத்தி பெருகுகிறது என்பது வெளிப் படையான ஒரு மாற்றமாகும். அதைப் போன்று வேறு மாற்றங்களையும் நம்மால் கண்டறிய இயலும்.

- கட்டுமானத்துறை வளருகிறது.
- தொழில்துறை உற்பத்தியில் வளர்ச்சி ஏற்படுகிறது
- 


இங்கே குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங்களைப் பொதுவாகப் பொருளாதார வளர்ச்சி எனக் குறிப்பிடலாம்.

## பொருளாதார வளர்ச்சி (Economic growth)

ஒரு பொருளாதார அமைப்பில் பொருட்களுடையவும் சேவைகளுடையவும் உற்பத்தியில் உருவாகும் வளர்ச்சியே பொருளாதார வளர்ச்சி எனப்படுகிறது. பொருட்களுடையவும், சேவைகளுடையவும் அளவு கூடுகிறது என்றால் நாட் டின் தேசிய வருமானம் உயருகிறது என்பது பொருள். சுருக்கமாகக் கூறினால் ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியில் கடந்த வருடத்தைக் கணக்கிடும் போது உண்டாகும் வளர்ச்சி பொருளாதார வளர்ச்சி என்றறியப்படுகிறது.



பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டைக் கவனியுங்கள். 2013-14 வருடத்தில் ஒரு வட்டாரத்தில் 100குவிண்டல் நெல் உற்பத்தி செய்யப்பட்டதாகக் கருதவும். ஆனால் 2014- 15 நிதி ஆண்டில் நெல் உற்பத்தி 110 குவிண்டலாக உயர்ந்தது. முந்தைய ஆண்டைப் பொறுத்துவரையில் 2014-15- இல் 10% உற்பத்தி வளர்ச்சியடைந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம். இது பொருளாதார வளர்ச்சியைக் குறிப்பிடுகிறது. பொருளாதார வளர்ச்சி ஏற்படும் போது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான நாட்டின் திறன் வளருகிறது. பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள சார்ட்டிலிருந்து கண்டுபிடிக்கலாம்.




உற்பத்தித்துறையில் மாற்றம் உருவாவதுடன் கூடுதல் வேலைவாய்ப்புகள் நாட்டில் உருவாகும் எனப் பொதுவாகக் கருதப்படுகிறது. அந்த வேலை வாயிலாகக் கிடைக்கும் வருமானம் வேலையாட்களின் வாங்கல் திறனை உயர்த்துகிறது. வேலையில் ஈடுபடுபவர்களின் வாழ்க்கைத் தரம் இதன் வழியாக மேம்படுவதற்கு வாய்ப்புள்ளது.



*பொருளாதார வளர்ச்சி ஒரு பொருளாதார அமைப்பில் என்னென்ன மாற்றங்களை உருவாக்குகிறது?*

## பொருளாதார வளர்ச்சி விகிதம் (Economic growth rate)

பொருளாதார வளர்ச்சியைக் குறித்து நாம் புரிந்து கொண்டோம் அல்லவா? பொருளாதார வளர்ச்சி எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதைப் பார்ப்போம். பொருளாதார வளர்ச்சி விகிதம் என்ற அளவுகோல் இதற்குப் பயன்படுத்தப் படுகிறது. தேசிய வருமானத்தில் ஏற்படும் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார வளர்ச்சி கணக்கிடப்படுகிறது. முந்தைய ஆண்டை விட நடப்பு ஆண்டில் தேசிய வருமானத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் விகிதம் பொருளாதார வளர்ச்சி விகிதம் எனப்படுகிறது.

## பொருளாதார முன்னேற்றம் (Economic development)

பொருளாதார வளர்ச்சி என்ன என்பதைப் புரிந்துகொண்டீர்கள் அல்லவா? பொருளாதார வளர்ச்சி உருவாவதால் மட்டும் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட்டுள்ளது எனக் கூற இயலாது. வாழ்கைத் தரம் மேம்பட வேண்டுமெனில் தேசிய வருமானத்துடன் வேறு ஏராளமான வாழ்க்கைச் சூழல்களும் கிடைக்க வேண்டும். அத்தகையச் சூழல்கள் எவையென்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

- அனைவருக்கும் சத்துணவு கிடைக்கச் செய்தல்
- அனைவருக்கும் மேம்பட்ட உடல்நலப்பாதுகாப்பு அமைப்புகள்.
- அனைவருக்கும் கல்வி வசதிகள்.
- அனைவருக்கும் குடிநீர் வசதி.
- 

இத்தகைய மேம்பட்ட வாழ்க்கைச் சூழல்கள் அனைவருக்கும் கிடைக்கும் போது ஒரு நாட்டிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயருகிறது. பொருளாதார வளர்ச்சியுடன் வாழ்க்கைத் தரமும் உயரும் போது பொருளாதார முன்னேற்றம் ஏற்படுகிறது. நாடு பொருளாதார வளர்ச்சி அடையவும், நாட்டிலுள்ள அனைவருக்கும் அதன் பலனை அனுபவிக்கவும் இயலும் போது அந்த நாடு முன்னேற்றம் அடைந்துள்ளது எனக் கூறலாம்.

பொருளாதார முன்னேற்றம் = பொருளாதார வளர்ச்சி + வாழ்க்கைத் தரத்திலுள்ள உயர்வு

*பொருளாதார வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றுடன் தொடர்புடைய சில கூற்றுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றைப் பொருளாதார வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் என வகைப்படுத்தலாம்.*



- *தேசிய வருமானம் உயர்ந்துள்ளது.*
- *கோதுமை உற்பத்தி 150 கோடி டன்னாக உயர்ந்தது.*
- *தேசிய சாலைகள் நான்கு வழிச் சாலைகளாக மாற்றப்பட்டுள்ளது.*
- *வேலையாட்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்கப்பட்டது.*
- *சுகாதார துறையில் மிக நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டது.*
- *கல்வி நிறுவனங்களின் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டது.*

பொருளாதார வளர்ச்சியும் பொருளாதார முன்னேற்றமும் ஒன்றொடொன்று தொடர்பு கொண்டுள்ளது எனவும். ஆனால் அவற்றிற்கிடையே வெளிப்படையான சில வேற்றுமைகள் உண்டு எனவும் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? சில வேற்றுமைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் தொகுக்கப்பட்டுள்ளது.

KT-535-2/Soc. Sci. II-9 (T) Vol-2

| பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|
| • உற்பத்தியிலும் வருமானத்திலும் உயர்வு. | • வாழ்க்கைத் தரத்தில் உருவான வளர்ச்சி |
| • தேசிய வருமானத்தின் வளர்ச்சியே அளவுகோல் | • பௌதீக வாழ்க்கைத்தரக் குறியீடு மனித வளமேம்பாட்டுக் குறியீடு ஆகியவை அளவு கோலாகும் . |
| • பொருளாதார வளர்ச்சி எண்ணிக்கையில் குறிப்பிடப் படுகிறது | • தரமான மாற்றத்தைக் குறிப்பிடுகிறது |
| • பொருளாதாரக் காரணிகளுக்கு மட்டும் முக்கியத்துவம். | • பொருளாதாரமும், சமூகபரமானது மான காரணிகளுக்கு முக்கியத்து வம் அளிக்கப்படுகிறது. |
| • வளர்ச்சி குறுகிய கால அளவில் ஏற்படுகிறது. | • முன்னேற்றம் நீண்டகால அளவில் ஏற்படுகிறது. |

## முன்னேற்றக் குறியீடுகள் (Development Indices)

உலக நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகள் எனவும் வளரும் நாடுகள் எனவும் வகைப் படுத்தப்பட்டுள்ளன. எதன் அடிப்படையில் இவ்வகைப்பாடு நடத்தப்படுகிறது? ஒரு நாடு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை எவ்வாறு கணக்கிடலாம்? பொருளாதார முன்னேற்றம் கணக்கிடுவதற்கும் மதிப்பிடுவதற்கும் பொதுவாக அங்கீகரிக்கப்பட் டுள்ள சில குறியீடுகள் உள்ளன. முக்கியமான முன்னேற்றக் குறியீடுகளைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள விளக்கப்படத்திலிருந்து கண்டுபிடிப்போம்.

**முன்னேற்றக் குறியீடுகள்**

- தனிநபர் வருமானம்
- பௌதீக வாழ்க்கைத் தரக் குறியீடு
- மனித மேம் பாட்டுக் குறியீடு
- மகிழ்ச்சிக் குறியீடு

## தனிநபர் வருமானம் (Percapita Income)

முன்னேற்றக் குறியீடுகளில் மிக எளிமையானதும் தொடக்கக் காலத்தில் முன் னுரிமை வழங்கி கணக்கிடப்பட்டிருந்ததும் தனிநபர் வருமானமாகும். இது ஒரு பரம்பரை முன்னேற்றக் குறியீடாகும். தேசிய வருமானத்தை மக்கள் தொகை யால் வகுத்தால் கிடைக்கும் வருமானம் தனிநபர் வருமானம் எனப்படும்.

இந்தக் குறியீட்டின் படி ஒரு நாடு பொருளாதார வளர்ச்சி அடைந்துள்ளதா? என்பதைக் கண்டுபிடிப்பதற்கு இரண்டு செயல்களை உற்றுநோக்க வேண்டும்.

- தேசிய வருமானத்தின் வளர்ச்சி விகிதம்
- மக்கட் தொகை வளர்ச்சி விகிதம்

தேசிய வருமானத்தின் வளர்ச்சி விகிதம் மக்கட் தொகை வளர்ச்சி விகிதத்தை விடக் கூடினால் மட்டுமே தனிநபர் வருமானம் அதிகரிக்க முடியும் தனிநபர் வருமானத்தின் உயர்வு முன்னேற்றத்தின் ஒரு குறியீடாகும். ஒரு நாட்டின் பொரு ளாதார வளர்ச்சியை முந்தைய வருடங்களோடு ஒப்பிடவும், பல்வேறு நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை ஒப்பிடவும் தனிநபர் வருமானம் பயன்படுகிறது

ஒரு முன்னேற்றக் குறியீடு என்ற நிலையில் தனிநபர் வருமானத்திற்கு ஏராள மான குறைபாடுகள் (Limitations) உண்டு.

- தனிநபர் வருமானம் ஒரு சராசரி வருமானமாகும். எடுத்துக்காட்டாக ஒரு நாட்டின் மொத்த வருமானம் 40,000 ரூபாய் எனக் கருதவும். இதன் பொருள் ஒரு நாட்டிலுள்ள ஒவ்வொரு நபருடையவும் கையில் இவ்வளவு வருமா னம் கிடைக்கிறது என்று அல்ல. கோடி வருமானம் உடையவர்களும் வரு மானம் மிகக் குறைந்தவர்களும் இதில் உட்படுவர். எனவே இது வெறும் எண்ணிக்கையளவிலான கணக்கிடுதல் மட்டுமாகும்.
- தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் பொருளாதார முன்னேற்றம் கணக் கிடும் போது ஏழை- பணக்காரப் பிரிவுகள் நிலைநிற்பதாக இருந்தால் வாழ்க் கைத் தரம் பெற்றுள்ளது எனக்கூற இயலாது.
- வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் காரணிகளான கல்வி, சத்துணவு வசதி , உடல்நலப்பாதுகாப்பு போன்றவை தனிநபர் வருமானம் என்ற முன்னேற்றக் குறியீட்டின் எல்லைக்குள் உட்படுவதில்லை.
- பொருளாதார வளர்ச்சிக்கு மேலாக, அதன் சரியான பங்கீடும். அதன் வழியாக ஏற்படுகின்ற சமூகநலனும் இந்த முன்னேற்றக் குறியீடு கணக் கிடுவதில்லை.

## பௌதீக வாழ்க்கைத் தரக் குறியீடு (Physical Quality of Life Index - PQLI)

ஒரு முன்னேற்றக் குறியீடு என்ற நிலையில் தனிநபர் வருமானத்தை விட மேலாக அறிவியல் சார்ந்த தவிர்க்க இயலாத ஒரு குறியீடு உயர்ந்து வந்தது. அதன் விளைவாக 1979- இல் பௌதீக வாழ்க்கைத்தரக் குறியீடு நடைமுறைக்கு வந்தது.

தனிநபர் வருமானம் என்ற ஒரே நிபந்தனைக்குப் பதிலாகப் பௌதீக வாழ்க்கைத் தரக்குறியீடு பிற மூன்று காரணிகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. அவை கீழே கூறப்பட்டுள்ளவையாகும்.

- எதிர்பார்க்கும் ஆயுட்காலம்
- குழந்தை இறப்பு விகிதம்
- அடிப்படை எழுத்தறிவு

பௌதீக வாழ்க்கைத் தரக் குறியீடு பொருளாதார முன்னேற்றத்தை வேறுபட்ட கண்ணோட்டத்தில் உற்றுநோக்குகிறது.

எடுத்துக்காட்டாக

- சிகிச்சை வசதிகள்கூடும் போது வாழ்க்கைத் தரமும் பொருளாதார முன் னேற்றமும் ஏற்படுகிறது.
- புதிய கல்வி வசதிகள் வரும் போது கல்வியின் தரமும் வாழ்க்கைத் தரமும் மேம்படுகிறது.

தனிநபர் வருமானத்தை விடச் சிறந்த முன்னேற்றக் குறியீடு பௌதீக வாழ்க் கைத் தரக் குறியீடாக இருந்தாலும் இது தனிநபர் வருமானத்தைப் புறக்கணிக்கி றது என்பது அதன் முக்கிய குறைபாடாகும்.

## மனிதவள மேம்பாட்டுக் குறியீடு (Human Development Index)

மனிதவள மேம்பாட்டைக் நிபந்தனையாக்கியுள்ள பொருளாதார முன்னேற்றம் இதுவாகும்.

ஐக்கிய நாட்டு முன்னேற்றச் சபை (U.N.D.P) மனிதவள மேம்பாடு என்ற கருத் தைக் குறித்துக் கூறியுள்ளதைக் கவனியுங்கள்:

“மனிதவளம் மேம்படுவதற்கு மக்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளை விரிவுப டுத்தும் செயல்பாடுதான் மனிதவள மேம்பாடு.”

மனிதவள மேம்பாட்டிற்கு துணைநிற்கும் ஏராளம் காரணிகள் உண்டு. சில எடுத் துக்காட்டுகளைப் பாருங்கள்.

- மேம்பட்ட கல்வி வசதிகள்
- மேம்பட்ட உடல்நல பாதுகாப்பு அமைப்பு
- கூடுதல் பயிற்சி

மேற் குறிப்பிட்டுள்ளவை எல்லாம் மனிதவள மேம்பாட்டிற்குத் வழி நடத்துபவை யாகும். இனி நாம் தெரிந்து கொள்ள வேண்டியது இத்தகைய மனிதவள மேம்பாடு உருவானால் அது பொருளாதார முன்னேற்றத்திற்கு எவ்வாறு உதவும் என்பதாகும்: ஒரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம்.

தரமான கல்விவசதிகளை உருவாக்குகிறது

↓

பெரும்பாலோர் கல்வி பெறுகின்றனர்.

↓

தரமான கல்வி கிடைத்தவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்புகள் கிடைக்கிறது

↓

வேலை கிடைக்கும்போது வருமானமும் வாங்கும் திறனும் பெருகுகிறது

↓

தரமான வாழ்க்கைச் சூழல்களை அடைய இயலுகிறது.



*கீழே கொடுக்கப்பட்டுள்ள வேறொரு சூழலை முழுமையாக்குங்கள்.*

*புதிய மருத்துவமனைகள் நிறுவப்படுகிறது*

↓

— — — — — — — — — — — — — — — —

↓

— — — — — — — — — — — — — — — —

↓

— — — — — — — — — — — — — — — —

மனிதவள மேம்பாட்டு குறியீட்டை உருவாக்குவது மூன்று முக்கிய காரணிகளின் அடிப்படையிலாகும். அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- தனிநபர் வருமானம்
- எழுத்தறிவும் மொத்த பள்ளி சேர்க்கை விகிதமும்
- ஆயுட் காலம்

மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டின் மதிப்பு பூஜ்யத்துக்கும் ஒன்றுக்கும் இடையிலாகும். பூஜ்யம் என்பது சிறிதளவும் முன்னேற்றமின்மையைக் குறிப்பிடும் போது ஒன்று மிக உயர்ந்த முன்னேற்றத்தைக் குறிப்பிடுகிறது. குறியீட்டின் மதிப்பின் அடிப்படயில் உலக நாடுகளை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்துவர். கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைக் கவனியுங்கள்.

| **H.D.I. மதிப்பு** | **பிரிவு** |
|---|---|
| 0.8 முதல் 1.0 வரை | உயர்ந்த மனிதவள மேம்பாடு |
| 0.5 முதல் 0.79 வரை | இடைநிலை மனிதவள மேம்பாடு |
| 0.49 -ம் அதற்கு குறைவும் | தாழ்ந்த மனிதவள மேம்பாடு |

ஐக்கிய நாட்டு முன்னேற்றத் திட்டம் (UNDP) தான் இவ்வாறு உலகநாடுகளை வகைப்படுத்தி அட்டவணை தயாரித்து வெளியிடுகிறது. 1990 முதல் ஒவ்வொரு ஆண்டும் UNDP மனிதவள மேம்பாட்டு அறிக்கை வெளியிட்டு வருகிறது.

*ஏதேனும் சில உலக நாடுகளின் 2014 -லுள்ள மனிதவள மேம்பாட்டின் மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. நாடுகளை மனிதவள மேம்பாட்டின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாகப் பிரித்து அட்டவணைப்படுத்துங்கள்.*



- *இந்தியா - 0.586*
- *ஜப்பான் - 0.891*
- *மாலி - 0.407*
- *இலங்கை - 0.751*
- *நார்வே - 0.944*
- *ஹெய்தி - 0.471*

மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டின் எதிர்மறையாக ஐக்கிய நாட்டுச் சபை உருவாக்கிய மற்றொரு குறியீடே மனித வறுமைக் குறியீடு. 1997- இல் இதன் முதல் அறிக்கை வெளியிடப்பட்டது. மூன்று காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மனித வறுமைக் குறியீடு தயாரிக்கப்படுகிறது. நீண்டதும் உடல்நலம் நிறைந்தது மான வாழ்க்கை, அறிவு மற்றும் தரமான வாழ்க்கை ஆகியனவாகும்.

## மகிழ்ச்சிக் குறியீடு (Happiness Index)

மேற்குறிப்பிட்ட முன்னேற்றக் குறியீடுகளுடன் ஐக்கிய நாட்டு சபை அங்கீகாரம் அளித்த புதிய ஒரு முன்னேற்றக் குறியீடு ஆகும் மகிழ்ச்சிக் குறியீடு. பூட்டான் உருவாக்கிய இந்த குறியீட்டிற்கு ஐக்கிய நாட்டு சபை அங்கீகாரம் அளித்தது.

ஒன்பது குறியீடுகள் மகிழ்ச்சிக் குறியீடு கண்டுபிடிப்பதற்குக் கணக்கிடப்படுகிறது. அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- ஆரோக்கியம்
- வாழ்க்கைத் தரம்
- இயற்கையினுடையவும் பல்வகை உயிரினங்களுடையவும் பாதுகாப்பு
- சமூக வாழ்க்கையும் அயல்வீட்டினர் தொடர்பும்
- ஊழலற்ற ஆட்சி
- பண்பாட்டு வேற்றுமை
- கல்வி
- நேரத்தின் சரியான பயன்பாடு
- மனநலம்

2015 -இன் மகிழ்ச்சிக்குறியீட்டிற்கேற்ப உலக நாடுகளுக்கிடையே இந்தியாவின் இடம் 117 ஆகும். ஐஸ்லாந்து, டென்மார்க், நார்வே ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களில் உள்ளது.

## இந்தியாவில் முன்னேற்றம் எதிர்கொள்ளும் சவால்கள்

இந்தியாவின் மேம்பாட்டிற்கு ஏராளமான அளவுகோல்கள் உள்ளன. எனினும் பல அறைகூவல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அவற்றுள் முக்கியமானது வறுமை (Poverty). திட்டக்கமிஷனுக்காக ரெங்கராஜன் குழு தயாரித்த கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 2011 - 12 இல் 29.5% மக்கள் வறுமையில் வாழ்பவர்கள் ஆகும். வறுமயைத் தவிர எழுத்தறிவின்மை, சத்துணவுக் குறைபாடு கொடிய பொருளாதார நெருக்கடி, பட்டினி மரணம், வேலையின்மை ஆகிய பிரச்சினைகள் வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் நிலைநிற்கிறது.

வேலையில்லை என்பது இந்தியா எதிர் கொள்ளும் ஒரு முக்கிய முன்னேற்றப் பிரச்சினையாகும். . கடந்த 20 ஆண்டு களுக்கு மேலாக பார்க்கக் கூடிய ஒன்று நமது பொருளாதார வளர்ச்சி 8- 9 சதவீ தமாக இருந்தாலும் வேலைவாய்ப்பின் (Employment) வளர்ச்சி விகிதம் ஒரு சத வீதம் அல்லது அதற்கு குறைவானதா கும். பொருளாதார வளர்ச்சி புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவ தில்லை என்பதே இதன் பொருள்.



### வறுமை இந்தியாவில்

இந்தியாவில் வறுமையைக் கணக்கிடுவது கலோரி யின்(Calorie intake) அடிப்படையிலாகும். யார் ஏழை? கிராமப்புறங்களில் நாள் ஒன்றுக்கு 2400 கலோரி சக் தியை உடலுக்கு வழங்க இயலும் உணவு கிடைப்ப தற்கான வருமானம் இல்லாவிட்டால் ஒரு நபர் வறுமை யிலாகும். நகர்புறங்களில் இது 2100 கலோரியாகும். இந் தியாவில் உத்திரப்பிரதேசம், பீகார்,உத்ரகாண்ட், சத்தீஸ் கட், ஒடிசா ஆகிய மாநிலங்களில் 35 சதவீதத்திற்கு அதி கமான மக்கள் வறுமையிலாகும்.

நமது முன்னேற்றம் எதிர்கொள்ளும் வேறொரு பிரச்சினை சமத்துவமின்மை (Inequality). சமத்துவமின்மை மூன்று முறைகளிலுள்ளது

- சொத்தின் மீதுள்ள சமத்துவமின்மை
- வருமானத்தில் உள்ள சமத்துவமின்மை
- நிலப்பகுதிகளுக்கிடையே உள்ள சமத்துவமின்மை

இந்த மூன்று வகையிலான சமத்துவமின்மைகளும் இந்தியாவில் அதிகமாக நிலவி வருகிறது. நாட்டின் மொத்த சொத்திலும் நாட்டில் கிடைக்கும் வருமானத் திலும் மக்களுக்குள்ள பங்கின் அடிப்படையில் முறையே சொத்திலுள்ள சமத் துவமின்மையும் வருமானத்திலுள்ள சமத்துவமின்மையும் கணக்கிடப்படுகிறது.

மூன்றாவதாக நாம் குறிப்பிட்ட சமத்துவமின்மை நிலப்பகுதிகளுக்கிடையிலான சமத்துவமின்மையாகும். எடுத்துக்காட்டாக பெரிய நகரங்களில் பெரும்பான்மை யான மக்களுக்கும் வேலை. நல்ல மருத்துவமனைகள், சாலை, குடிநீர் வசதி, பயணவசதி, பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், ஆகியவை உள்ளன. ஆனால் பீகார், உத்திரப்பிரதேசம்,ஒடிசா ஆகிய மாநிலங்களிலுள்ள சில கிராமங்களில் இத்த கைய வசதிகள் ஒன்றுமில்லை. அங்கே பட்டினி மரணம், வேலையின்மை, சாலை மற்றும். செய்தித் தொடர்பு வசதிகளின் குறைபாடு ஆகியவை நிலை நிற்கிறது. இவ்விதம் சில பகுதிகள் வளர்ச்சியில் முன்னணியிலும் சில பகுதிகள் மிகவும் பின்னோக்க நிலையிலும் நிற்கும் நிலை காணப்படுகிறது. இது வட்டா ரச் சமத்துவமின்மை என்பதன் பொருளாகும்.

## நிலையான முன்னேற்றம் (Sustainable Development)

எந்த ஒரு பொருளாதார அமைப்பினுடையவும் முக்கிய இலக்கு என்பது பொரு ளாதார முன்னேற்றம் என்பதைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? பொருளா தார முன்னேற்றம் வாயிலாக ஏராளமான மாற்றங்கள் நம்மைச் சுற்றி நிகழ்கிறது. எடுத்துக்காட்டாக,

- சிறந்த போக்குவரத்து வசதிகள் உருவாகிறது.



- நகரமயமாக்கல் வேகமடைகிறது.
- தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது.
- 

இத்தகைய மாற்றங்கள் மனித வாழ்க்கையின் தரமும் நாடுகளின் பொருளாதார நிலையும் மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆனால் மனிதனின் கட்டுப்படுத்த முடியாத ஆவல் அடங்குவதில்லை. அது வளங்களை அதிகமாகச் சுரண்டுவதற்கும் இயற்கையை அழிப்பதற்கும் நேராக மனிதனைக் கொண்டு செல்கிறது. நகரமயமாக்குதல், வேளாண்மையில் வியாபாரமயமாக்குதல் ஆகியவற்றின் விளைவாக ஏற்படும் சில மாற்றங்களின் படங்களைக் கவனியுங்கள்.





*இந்தப் படங்களை உற்றுநோக்கியதன் அடிப்படையில் மனிதனின் முன்னேற்ற ஆவல் இயற்கையில் என்னென்ன விளைவுகளை உருவாக்குகிறது என்பதைக் கண்டுபிடிக்கவும். அதிகமாக கருத்துகளைச் சேர்க்கவும்.*



அளவுக்கு அதிகமான பொருளாதார வளர்ச்சியை இலக்காக வைத்து மனிதன் செய்யும் செயல்பாடுகள் பலவேளைகளில் இயற்கை வளங்களின் சுரண்டல்களுக்கும், இயற்கை அழிவிற்கும் காரணமாகிறது. நமது நாட்டில் அன்றாடம் உயர்ந்து வரும் கட்டிடங்களுக்கும். சாலைகளுக்குமாக பாறைகளும் , குன்றுகளும் அளவுக்கதிகமாக இடிக்கப்படும் போது அது மனிதனின் வாழ்க்கைக்கும் வட்டார காலநிலை மாற்றத்திற்கும் கேடு விளைவிக்க ஏதுவாகிறது. இத்தகைய பிரச்சினைகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை உயர்த்துவதாக இருந்தாலும் ஒரு பிரிவு மக்களின் வாழ்க்கையில்  அதிக பிரச்சினைகளை உருவாக்குகிறது.

நமக்குத் தேவை, மனிதநேயமுள்ளதும் இயற்கைக்குக் கேடுவிளைவிக்காததுமான ஒரு வளர்ச்சி அணுகுமுறையாகும், அல்லது நிலையான வளர்ச்சியாகும்.

ஐக்கிய நாட்டுச்சபை நியமித்த பிரண்ட்லாண்ட் குழு நிலையான முன்னேற்றத்தை இவ்வாறு வரையறுத்துள்ளது:

"வருங்காலத் தலைமுறைக்கு அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறனில் தடைவராமல். இன்றைய தலைமுறை அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றும் அணுகுமுறையே நிலையான முன்னேற்றம்."

இயற்கைவளங்களைப் பயன்படுத்துவதில் சமூகநீதியை உறுதிப்படுத்தும் கண்ணோட்டமே இது.

இயற்கைவளங்கள் ஒரு தலைமுறையினருக்கு மட்டும் அனுபவிக்க வேண்டியது அல்ல வருங்கால தலைமுறையினருக்கும் உரிமையானது என்ற கண்ணோட்டம் தான் நிலையான முன்னேற்றத்தின் உட்கருத்து. நிலையான முன்னேற்றத்திற்கு மூன்று முக்கிய நோக்கங்கள் உள்ளன.

- சுற்றுச்சூழல் இலக்குகள்
- பொருளாதார இலக்குகள்
- சமூக இலக்குகள்

உங்களைச் சுற்றியுள்ள இயற்கையை உற்றுநோக்குங்கள். நிலையான முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்கும் செயல்பாடுகள் எவையென்பதைக் கண்டுபிடிக்கவும். கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை விரிவுபடுத்துங்கள்.

- வயல்களை நிரப்புதல்
- அளவுக்கு மீறிய பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடு
- சுத்த நீரை மாசுப்படுத்துதலும் வீணாக்குதலும்
- 
- 

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் நிலையான முன்னேற்றத்திற்கு தடையானவைகளாகும். இயற்கை வளங்களை வரும் தலைமுறையினருக்கும் கிடைக்கச் செய்யும் வகையில் பொருளாதார முன்னேற்றம் நிலையான முன்னேற்றம் ஆகியவற்றைச் செயல்படுத்த வேண்டிய அறிவுரைகளை முன்வைப்பீர்களல்லவா?

- மழை நீர் சேகரிப்பு
- 
- 
- 

## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- பொருளாதார வளர்ச்சியினுடையவும் முன்னேற்றத்தினுடையவும் சிறப்புகளை எடுத்துரைக்கின்றனர்.
- முன்னேற்றக் குறியீடுகளின் விளக்கப்படம் தயாரித்து வெளியிடுகின்றனர்
- பௌதீக தரம் வாய்ந்த குறியீடுகளின் சிறப்புகளை எடுத்துரைக்கின்றனர்
- மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளின் சிறப்புகளைக் கண்டுபிடித்து வெளியிடுகின்றனர்.

- முன்னேற்றம் எதிர்கொள்ளும் அறைகூவல்களின் அட்டவணை தயாரித்து வெளியிடுகின்றனர்.
- நிலையான முன்னேற்றத்தின் முக்கியத்துவத்தை விளக்குகின்றனர்



## மதிப்பிடலாம்

- பொருளாதார வளர்ச்சியும் முன்னேற்றமும் இடையிலான வேற்றுமை களை எழுதவும்
- பொருளாதார முன்னேற்றக் குறியீடு என்ற நிலையில் தனிநபர் வருமானத்தின் குறைபாடுகளை விளக்கவும்.
- மனிதவள மேம்பாட்டுக் குறியீடு கணக்கிடுவதில் கருத்திற்கொள்ளும் காரணிகளை எழுதவும்.
- நிலையான முன்னேற்றம் என்பதன் பொருள் என்ன? நிலையான முன்னேற்றம் வருவதற்கு உதவும் அறிவுரைகளை எழுதவும்
- நவீன வளர்ச்சி செயல்பாடு எதிர்கொள்ளும் சவால்களை விளக்கவும்



## தொடர் செயல்பாடுகள்

- இந்தியாவின் நிலையான முன்னேற்றத்திற்கு தடைநிற்கும் செயல்பாடு களைச் செய்தித் தொடர்பு ஊடகங்கள் ,இணையதளம் ஆகியவற்றின் உதவியுடன் கண்டுபிடித்து அட்டவணை தயாரிக்கவும்.
- உங்கள் வட்டாரத்தில் பொருளாதார முன்னேற்றத்திற்கு தடைநிற்கும் காரணிகளைக் கண்டுபிடித்து தீர்வு முறைகளை எழுதவும்
- மனிதவள மேம்பாட்டுக்கு குறியீடு குறித்து அதிகமான தகவல்களைப் பத்திரிக்கைகள் ,இணையதளம் போன்றவற்றில் நீங்கள் பார்த்திருப் பீர்கள். கிடைக்கின்ற தகவல்களைப் பயன்படுத்தி இந்தியாவின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடு மதிப்பு, பல்வேறு வருடங்களின் புள்ளி விவரம் கடந்த ஐந்து ஆண்டுகளில் உருவான மாற்றங்கள் ஆகிய வற்றைச் சேகரிக்கவும்.



# 7 பாதுகாப்பான நாளைக்கு

*"என்ன மழை! சாயங்காலத்தில் தொடங்கி விடியும் வரை பெய்தது. கார்மேகக் கூட்டங்கள் வானத்தில் ஆனந்தமாக நடந்தன. குன்றுகளுடையவும், காடுகளுடையவும் முகங்கள் கறுத்தன.*

*பிரம்மகிரியின் உச்சியில் காவல் நின்ற தனித்த மரங்கள் கோபம் கொண்டன. காற்றின் கட்டுகள் உடைந்தன. அவை கார்மேகங்களை உடைத்து எறிந்தன. தூக்கி வீசப்பட்ட கற்களைப் போன்று பனிக்கட்டிகள் சிதறி விழுந்தன.*

*அரும்புகள் தோன்றிய வெள்ளரி, பூசணி, கும்பளச் செடிகளெல்லாம் ஐயோ தகர்ந்தன....*

*இதுவே வயநாட்டின் நிலை, காய்கறிகள் சற்று வளரும் போது வருகிறது ஒரு மழை, ஆலங்கட்டிகள் விழுந்து எல்லாம் மண்ணின் அடியிலாகும், அல்லது நாசம் விதைக்கும் காற்று. ஒரு வாழைக் கன்று கூட எஞ்சுவதில்லை.*

*வானத்தின் மையப்பகுதியிலிருந்து பாய்ந்து வரும் வளமான கருப்பு நிற தண்ணீர் வரம்புகள் வழியாக வயல்களில் வேகமாக ஒழுகி கீழே பாவலி நாட்டின் வழியாக நாட்டிலிருந்து கடந்து செல்கிறது".*

**– நெல், பி. வல்சலா**

வயநாட்டுச் சுற்றுச்சூழலைக் குறித்து நாவலாசிரியர் பி. வல்சா இவ்வாறு கூறுகிறார்.



புதுமண்ணைத் தேடிச் சென்ற பழந்தலைமுறையின் உழைப்பினுடையவும் ,தியாகத்தினுடையவும் கதைகளைக் கூறும் காசர்கோட்டின் கிழக்குப் பகுதிகளாகிய எல்லுகோச்சி, ராஜபுரம், ராணிபுரம், கண்ணூரின் மலைப்பகுதிகளாகிய இரிட்டி, பேராவூர்,ஆறளம், இடுக்கியிலுள்ள கட்டப்பனை, நெடுங்கண்டம், உடும்பஞ்சோலை ஆகிய இடங்களில் எல்லாம் இதைப் போன்று குளிரும், மூடுபனியும் நிறைந்துள்ள சூழ்நிலை உள்ளது. தேயிலை, வாசனைத் திரவியங்கள் ஆகியவை இங்கே அதிகமாகப் பயிர் செய்யப்படுகிறது.

காலநிலை, புவியமைப்பு மண், வேளாண்மை, தாவர, உயிரினங்கள் ஆகியவை மட்டுமல்ல மனிதனும் சுற்றுச்சூழலின் ஒரு பகுதியாகும்.

இயற்கையில் உயிருள்ளதும், உயிரற்றதுமான எல்லா காரணிகளும் சேர்ந்ததே சுற்றுப்புறம் என நீங்கள் முன்வகுப்பில் படித்திருக்கிறீர்கள்.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்க்கையில் சுற்றுப்புறம் எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளது?

- குளிரான காலநிலை காணப்படுகிறது.
- பயிர் செய்வதற்கு உகந்த பயிர்கள் எவையென நிச்சயிக்கின்றனர்.

காடுகளையும் குன்றுகளையும் அழித்து வன விலங்குகளின் தாக்குதல்களையும் , மலேரியா போன்ற நோய்களையும் அனுபவித்து, மண்ணில் பொன் விளைவித்த ஒரு கூட்டம் மக்களின் கதை நடுக்கத்தை உருவாக்குவதாகும். மனிதன் சுற்றுப்புறத்துடன் இணைந்து வாழ்வதன் பகுதியாகச் சுற்றுப்புறத்தில் என்னென்ன செயல்பாடுகளைச் செய்துள்ளான்?

- மோசமான நில அமைப்பிலும் சாலைகள் உருவாக்கினர்.
- மலைச்சரிவுகளைத் தட்டுகளாக அமைத்து வேளாண்மை செய்தனர்
- பொருத்தமான இடங்களில் வீடுகள் உருவாக்கப்பட்டன.



## சுற்றுப்புறங்களின் வேறுபாடு

புவியின் எல்லா இடங்களிலும் உள்ள சுற்றுச்சூழல் ஒன்றுபோலுள்ளதா? கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் ஆய்வு செய்யுங்கள்.

தூசிகளை எழுப்பிக் கொண்டு எப்போதும் மணல் காற்று வீசுகின்ற வறண்ட பாலைவனங்களில் (படம் 7.1) மக்கள் வாழ்க்கை எப்படி இருக்கும்? அரேபியா பாலைவனத்திலுள்ள மக்களின் ஆடைமுறைக்கும் அந்த பகுதியின் காலநிலையுடன் அதிக தொடர்பு உள்ளது. தண்ணீர் வசதி குறைவாக உள்ளதால் இங்கே வேளாண்மை குறைவாகும். ஆனால், இங்கே மக்கள் அடர்த்தியும் செல்வமும் கூடுதலாகும். இதற்கான காரணம் அங்குள்ள பெட்ரோலிய சேமிப்புகள் ஆகும்.



படம் - 7.1



படம் - 7.2



படம் - 7.3

கடல்மட்டத்திலிருந்து கீழே நிலைகொள்ளும் நிலப்பகுதிகளைக் குறித்து கேள்விப் பட்டிருக்கிறீர்களா? நமது குட்டநாட்டைப் (படம் 7.2) போன்ற நில அமைப்பு உலகிலேயே அபூர்வமானதாகும், காயல்களுக்கும் தேங்கிக் கிடக்கும் நீர்நிலைகளுக்கும் இடையே வாழ்கின்ற மக்கள் கடின உழைப்பு வழியாக சேறுகளை அகற்றி நிலங்களை உயரமாக மாற்றி, நெல்லும், தென்னையும், வாத்து வளர்த்தலும் சேர்ந்த ஒரு சிறப்பான வாழ்க்கையை வாழ்கின்றனர். இங்குள்ள புவியியல் சூழலோடு இணைந்த இவர்களின் வாழ்க்கைமுறையில் இன்று சுற்றுலாத் துறை ஒரு முக்கியச் செயல்பாடாக விளங்குகிறது.

பனி உறைந்த சைபீரியன் பகுதியின் படம் (7.3) பார்த்தீர்களா? குறைவான வளங்களும், மிக மோசமான காலநிலையும் இங்குள்ள மக்களின் வாழ்க்கைக்குத் தடையாக நிற்கிறது. ஆனால் அங்கேயும் மக்கள் வாழ்கிறார்கள். ஒவ்வொரு பகுதியிலுமுள்ள சூழ்நிலைகளுக்குப் பொருத்தமாக மனிதர்கள் அவர்களுடைய வாழ்க்கையைச் ஒழுங்குபடுத்தியிருந்தனர் என இந்த எடுத்துக் காட்டுகள் வழியாகப் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

ஆனால் இயற்கை வளங்கள் அதிகமாகச் சுரண்டப்படுவதும் அறிவியல் சார்பற்ற செயல்பாடுகளும் இயற்கையின் சமநிலையை மாற்றுகிறது.



*மேற்குறிப்பிட்ட சுற்றுப்புறத்திலுள்ள பல்வேறு நுகர்வுடன் தொடர்புடைய சில வினாக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பான உங்கள் முடிவுகளை எழுதுங்கள்*

*அதிக அளவில் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதால் அரேபியன் பகுதியில் பெட்ரோல் தீர்ந்து விட்டால்?*

*குட்டநாட்டின் மோசமான சமநிலையற்ற காலநிலை அதிக மாசடைதல் மூலம் இன்று அழிவை நோக்கிச் செல்கிறது இது என்னென்ன விளைவுகளை உருவாக்கும்?*

*சைபீரியன் பகுதிகளில் மக்கள் வாழ்க்கைக்காக கையாண்டுள்ள வழிமுறைகள் யாவை?*

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்றால் என்ன? எதற்காக?

புவியிலுள்ள ஏராளமான உயிரினங்களில் ஒன்று மட்டும் தான் மனிதன். தன்னுடைய நிலைநிற்பிற்கு பிற உயிரினங்களை இவ்வளவு அதிகமாகச் சார்ந்து வாழக்கூடிய வேறு எந்த உயிரினமும் புவியில் இல்லை. உணவு, ஆடை, தங்குமிடம், மருந்து, எரிபொருள் ஆகியவற்றை நமக்கு வழங்குவது இயற்கையிலுள்ள தாவர உயிரினங்களாகும். நிலைநிற்றலுக்கு வாயுவையும் தண்ணீரையும் போன்று மண்ணும் முக்கியமானது. வாழ்விடத்தின் அமைப்பு, உணவுத் தொடர் ஆகியவற்றைக் குறித்து நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். தொடர்ச்சியாக நடைபெறும் இயற்கையின் பரிணாமச் செயல்களில் இறுதி முடிச்சு மனிதன் ஆவான். தன்னுடைய நிலைநிற்பை மட்டும் கருத்தில் கொண்டு இயற்கையோடு நடத்தும் செயல்பாடுகள் எதிர்விளைவுகளை உருவாக்குகிறது. இயற்கையின் சமநிலைக்கு தீங்கு விளைவிக்காத வகையில் செயல்பட வேண்டும் என்பது சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கிய நோக்கம் ஆகும். மனித இனம் மட்டுமல்ல அனைத்து உயிரினங்களுடையவும் நல்வாழ்விற்கான நிலைநிற்றலுக்கு சுற்றுப்புறத்தையும் அதன் வேறுபாடுகளையும் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.

### அடியும் அரவணைப்பும் கொண்டு..




பருவ கால மாற்றங்கள் உலாவருவது அற்புதமான காட்சியாகும். இடியும் மின்னலும் சேர்ந்து வரக்கூடிய மழைக்காலம். சில இடங்களில் பனிப்பொழிவு, தடையின்றி காற்று வீசும் இடங்கள். தென்றல் காற்று முதல் அனைத்தும் அடித்துச் செல்லும் புயல்காற்று வரை. மலைப்பகுதிகளில் மழைக்காலங்களில் மண்சரிவு ஏற்படுகிறது. தாழ்வான இடங்களில் வெள்ளப் பெருக்கு. இயற்கை நிகழ்வுகள் சில வேளைகளில் தீங்கு விளைவிப்பது உண்டு.

உயிருக்கும் உடைமைக்கும், சுற்றுப்புறத்துக்கும் தீங்கை விளைவிக்கும் செயல்கள் இயற்கைச் சீற்றங்கள் (Natural hazards). என்றறியப்படுகிறது

சில இயற்கை நிகழ்வுகளின் பெயர்கள் பலகையில் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றில் இயற்கைச் சீற்றங்கள் எவையென்பதைக் கண்டுபிடியுங்கள்.

## இயற்கைச் சீற்றங்கள் பேரழிவுகளாகும் போது


படம் (7.4) ஐ உற்றுநோக்குங்கள்

கனமழையில் நிலச்சரிவுக்கு வாய்ப்புள்ள இரு பகுதிகளை நீங்கள் படத்தில் பார்க்கிறீர்கள். இதில் எந்த பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டால். அது பேரழிவுகளாக மாறுவதற்கான வாய்ப்பு உள்ளது ஏன்?

பலவேளைகளில் இயற்கைச் சீற்றங்கள் மனிதனைப் பாதிப்பதில்லை.

மனிதன் ஆபத்தானவனாக மாறும் போது அவை பேரழிவுகளாக மாறுகிறது. அண்டார்டிகாவில் ஒரு பனிமலை இடிந்தால் அல்லது மக்கள் வசிக்காத பாலைவனத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டால் அவை எவ்வளவு தீவிரமாக இருந்தாலும் பேரழிவாகக் கணக்கிடப்படுவதில்லை. ஆனால் மக்கள் வாழக்கூடிய ஒரு பள்ளத்தாக்கில் இத்தகைய ஒரு நிகழ்வு நிகழ்ந்தால் அது பேரழிவாக மாறும்.

இயற்கையான காரணங்களால் நிகழும் பேரழிவுகள் இயற்கைப் பேரழிவுகள் எனப்படுகிறது (Natural disasters).



படம் – 7.4

## இந்தியாவில் இயற்கைப் பேரிடர்கள்

இந்தியாவில் எல்லா வருடமும் ஏராளம் மக்கள் இயற்கை பேரழிவுகளால் பலியாகவும் படுகாயமடையவும் செய்வதாக அறிக்கைகள் உள்ளன.

இந்தியாவில் நிகழும் இயற்கை பேரழிவுகளின் அட்டவணைக் கொடுக்கப் பட்டுள்ளது.

- புயல்காற்று
- நிலநடுக்கம்
- நிலச்சரிவு
- ஆலங்கட்டி மழை
- வறட்சி
- 
- இடி மின்னல்
- சுனாமி
- வெள்ளப்பெருக்கு
- பனிக்காற்று
- பனிப்பொழிவு

*ஆதாரம் : உள்துறை அமைச்சகம், இந்திய அரசு*

## இயற்கைப் பேரழிவுக்கான வாய்ப்புகள் கேரளத்தில்

கேரளத்தில் புவியமைப்பைக் குறித்து முன் வகுப்புகளில் படித்தது நினைவிருக்கிறது அல்லவா? சாய்ந்து நிற்கும் தென்னைமரங்கள் எல்லையான காயல்கள்...இடைநாட்டில் செழிப்பான பசுமை... சற்றுகிழக்காக இதமான காலநிலை உடைய மலைமடிப்புகள் உலகப் புகழ்பெற்ற கேரளத்தின் இயற்கையழகு. ஆனால் இயற்கையின் இந்த அழகிய முகம் இடையிடையே சினம் கொள்வதுண்டு. அப்போது தான் இழப்புகள் ஏற்படுகிறது. கேரளமும் இயற்கை பேரழிவுகளுக்கு வாய்ப்புள்ள ஒரு மாநிலமாகும்.

*கேரளத்தில் தீமை விளைவிக்கும் இயற்கைப் பேரழிவுகள் எவையெனத் தேடிக் கண்டுபிடியுங்கள்*

- *கேரளத்தில் மிக அதிகமாக நிகழக்கூடிய இயற்கைப் பேரழிவு எது?*
- *கேரளத்தில் நிலச்சரிவுகள் மிக அதிகமாக எந்த நிலஅமைப்பில் உண்டாகிறது. ஏன்? கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் வகுப்பில் விவாதித்து முடிவுகளை உருவாக்கவும்*
  - *நிலஅமைப்பு*
  - *மழை*

## நிலச்சரிவினால் ஏற்படும் பேரழிவு

கேரளத்தில் மிக அதிக ஆபத்தை விளைவிக்கும் பேரழிவே நிலச்சரிவு. பருவகால மேகங்கள் கேரளத்தில் வந்து கூடும் போது கிழக்கு மலையோரத்தில் சில பகுதிகள் நிலச்சரிவின் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது. இந்தக் காலத்தில் இடைநாட்டிலும் ஆங்காங்கே நிலச்சரிவு ஏற்படுவது உண்டு



படம் - 7.5

கொடுக்கப்பட்டுள்ள படம் ( படம் 7.5) உற்றுநோக்குங்கள்.

இது சமீப காலத்தில் கோழிக்கோடு மாவட்டத்திலுள்ள புல்லூராம் பாறையில் ஏற்பட்ட நிலச்சரிவின் படமாகும்.

இந்தப் படத்திலிருந்து என்னென்ன தகவல் களை உங்களால் தெரிந்து கொள்ள முடிந்தது?

-
-

“அனைவரும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தனர் காதைப்பிளக்கும் இடிமுழக்கம் போன்ற சத்தத்தைக் கேட்டு விழித்தனர் . அப்போது எல்லாம் முடிந்தது..... வீட்டின் ஒரு சுவரும் நானும் மட்டுமே எஞ்சினோம். உற்றார் உறவினர் அனைவரும் ஒழுகிச் சென்றனர் என்றென்றைக்குமாக...”

நிலச்சரிவு பேரிடருக்கு உட்பட்ட ஒரு நபரின் அனுபவத்தை நீங்கள் வாசித்தீர்கள். எல்லா நிலச்சரிவுகளுக்கும் இதைப்போன்று எத்தனையோ மனிதர்களின் இழப்புகள் பற்றி கூறுவதற்கு இயலும்.

திருவனந்தபுரம் மாவட்டத்தில் அம்பூரி என்ற இடத்தை விட பரந்ததும் விசாலவுமாயிருந்த, கோழிக்கோடு மாவட்டத்தில் உள்ள புல்லூராம் பாறையில் நிலச்சரிவு ஏற்பட்டபொழுது ஏழு நபர்கள் உயிரிழந்தனர். ஆனால் அம்பூரியில் 39 நபர்கள். மலைப்பகுதிகளில் உள்ள மக்கட்செரிவு இழப்பின் கடுமையை அதிகப்படுத்துகின்ற ஒரு காரணியாகும்.



*பொதுவாக 20$^0$ -க்குக் கூடுதல் சாய்வான இடங்கள் நிலச்சரிவுக்கு வாய்ப்புள்ளதாக புவியியல் ஆராய்ச்சிமையம் கண்டுபிடித்துள்ளது.*

## நிலச்சரிவு என்றால் என்ன?

அதிகச் சரிவான பகுதிகளில் குறுகிய நேரத்திற்குள் கனமழை பெய்யும் போது ஏராளமான மழைநீர் மண்ணில் ஆழ்ந்து இறங்குகிறது. இது மண்ணிலுள்ள துளைகளில் அழுத்தம் செலுத்துகிறது. இளகின பாறையின் அடியிலுள்ள மண் தண்ணீரின் அசைவு மூலம் கீழ்நோக்கி இறங்குகிறது . புவியீர்ப்பு விசையின் காரணமாக அந்த பகுதி முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியோ பெரிய சத்தத்துடன் இடிந்து விழுவதற்கு இது காரணமாகிறது. இந்த நிகழ்வே நிலச்சரிவு. மண்ணில் சேமிக்கப்படுகின்ற தண்ணீர் இதைத் தொடர்ந்து ஓடைகளாகப் பாய்ந்து செல்லத் தொடங்குகிறது. இந்த நீரின் ஒழுக்கு சில நாட்கள் கழியும் போது நின்று விடுகிறது. ஆனால் சில நேரங்களில் இது நிலையான நீரோடையாக மாறுவதுமுண்டு. மலைப்பகுதிகளிலுள்ள நீரோடைகள் அதிகமும் இவ்வாறு உருவானதாகும். நீரோடைகளின் தொடர்ச்சியான அரிப்பின் விளைவாக உண்டாகும் பள்ளத்தாக்குகள் காலப் போக்கில் பெரியதாகின்றன. இவ்வாறு புவிப்பகுதிகளின் பரிணாமச் செய

KT-535-3/Soc. Sci. II-9 (T) Vol-2

லின் விளைவே நீரோடைகளின் தோற்றம் என்று அறி வியல் உலகம் கருதுகிறது.

பலவேளைகளில் இயற்கையில் மனிதனின் அறிவி யல் சார்பற்ற செயல்களும் நிலச்சரிவுக்குக் காரண மாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்கள் ( 7.6) உற்று நோக்குங்கள்.

ஐம்பது வருடங்களில் ஒரு பகுதியில் ஏற்பட்ட மாற்றங் களை இந்தப் படங்கள் தெளிவுபடுத்துகிறது.




படம் - 7.6



*இந்தப் பகுதியில் என்னென்ன மாற்றங்களை உங்களால் கண்டுபிடிக்க முடிந்தது?*

- *மக்கட் தொகை பெருகியது*
- 
- 

காடுகளை அழித்தல், மலைச்சரிவில் நாம் செய்கின்ற அறிவியல் சார்பற் றச் செயல்கள் சரிவுகளைப் பலம் குன்றியவைகளாக மாற்றுகிறது. மலைச்ச ரிவுகளில் நடக்கின்ற அறிவியல் சார்பற்ற செயல்கள் யாவை?

- குன்றுகளின் பக்கங்களை இடித்து மண் எடுத்தல்.
- செங்குத்தான சரிவு உள்ள இடங்களில் மண்ணிற்கு இளக்கமூட்டும் பயிர்களை வேளாண்மை செய்தல்.
- கூடுதல் சரிவான இடங்களில் வீடுகளும் பிற கட்டிடங்களும் உருவாக் குதல்.

மனிதனின் இத்தகைய செயல்கள் நிலச்சரிவிற்கான வாய்ப்பை அதிகரிக் கச் செய்கிறது.

இடப்பற்றாக்குறை என்பது கேரளம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைக ளில் ஒன்றாகும். கேரளத்தின் மொத்த நிலப்பரப்பில் 30 சதவீதத்திற்கு அதி கமும் சரிவு கூடிய பகுதிகளாகும். எனவே புவிப்பயன்பாடு அறிவியல் சார் புடையதாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

## அறிவியல் சார்ந்த புவிப்பயன்பாட்டு முறைகள்

- குன்றின் சரிவுகளைத் தட்டுகளாக மாற்றி சரிவின் அளவைக்குறைத்தல்
- மலையோரப் பகுதிகளில் உருவாகும் நீரோடைகளை தடை செய் யாதிருத்தல்
- அதிகச் சரிவுள்ள இடங்களில் கட்டுமானப் பணிகளைத் தவிர்த்தல்.

*2015 ஏப்ரல் 25. இந்திய திட்ட நேரம் 11.41. மாதங்களாக நீண்டு நின்ற குளிருக்குப் பின்பு வந்த வெயிலின் மெல்லிய சூட்டில் மதிமயங்கி பசுமையான வயல்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும் தொழிற்சாலைகளிலும் பார்பாக் கிராம மக்களில் பெரும்பான்மையினரும் வேலையில் மூழ்கியிருந்தனர் ....*

*தீடீரென அது நிகழ்ந்தது.!*

*புவி முழுவதும் அதிர்ந்தது. புயல்காற்றில் அகப்பட்ட படகுகளைப் போன்று கட்டிடங்கள் ஆடி அசைந்தது. பின்பு சீட்டு மாளிகை போன்று தரைமட்டமாயின. பாலங்கள் மின்கம்பங்கள் அனைத்தும் உடைந்து தலைகீழாக நின்றது.. நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டி எழுப்பப்பட்ட கட்டிடங்களும் தப்பவில்லை.*

ஒரு நிலநடுக்கமும் அது விதைத்த இழப்புகளும் நீங்கள் வாசித்தீர்கள் . இந்த நிகழ்வு நடைபெற்று 24 மணிநேரத்திற்குள் தொடர்ந்து 40 முறை தொடர் நிலநடுக்கங்கள் உண்டானது. அப்போது காட்மண்ட் பட்டணத்தின் 200 கி. மீ. சுற்றளவில் பெரும் இழப்புகள் உண்டானது. பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் பலியான அந்த நிலநடுக்கத்தின் உற்பத்தி மையம் 28°15′ வடக்கு, 84°7′ கிழக்கு ஆகிய அட்சத் தீர்க்க ரேகைகள் இணையும் இடத்திலிருந்து 30 கி. மீ. தொலைவிற்கு கீழே என்று புவியியல் வல்லுநர்கள் கண்டுபிடித்தனர்.

*உலகப்படம் உற்றுநோக்கி மேற்கூறிய உற்பத்தி மையத்தைக் கண்டுபிடியுங்கள்.*



நிலநடுக்கம் அதிக இழப்புகளை ஏற்படுத்திய நேப்பாளத்தின் காட்சி படத்தில் (படம் 7.7) உள்ளது.

நேப்பாள் நிலநடுக்கத்தைக் குறித்து கொடுக்கப்பட்டுள்ள சிறு குறிப்பை வாசித்தீர்களல்லவா? ஏராளமான மக்களின் சோகம் ஒவ்வொரு நிலநடுக்கங்களுக்கும் பின்னால் காணப்படும்.




படம் 7.7

நிலநடுக்கம் என்றால் என்ன? அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும் பகுதிகளில் அவை ஏற்படுவதற்கான காரணங்கள் ஆகியவை குறித்து முந்தைய அலகில் நீங்கள் படித்தது நினைவிருக்கிறதல்லவா?.

## இந்தியாவில் நிலநடுக்கப் பேரிடர் தீவிரம்

இந்தியாவில் நிகழும் நிலநடுக்கத் தீவிரத்தின் அளவைக் குறிப்பிடும் நிலப் படத்தைப் பாருங்கள்.




படம் – 7.8 *ஆதாரம் : என். சி. இ.. ஆர். டி. பாடப்புத்தகம் வகுப்பு XI*

*நிலப்படத்தை உற்றுநோக்கி கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை கண்டுபிடியுங்கள்.*

- நிலநடுக்கத்தின் தீவிரம் மிகக் கூடுதலான பகுதிகளில் உட்பட்ட மாநிலங்கள் /பகுதிகள் யாவை?
- கேரளத்தில் நிலநடுக்கத்தின் தீவிரம் எந்த அளவில் உள்ளது?
- நிலநடுக்கத்தின் தீவிரம் மிகக்குறைவான மாநிலங்கள் / பகுதிகள் யாவை?

## நிலநடுக்கப் பேரிடர் கேரளத்தில்

கேரளமும் நிலநடுக்கம் ஏற்பட வாய்புள்ள பகுதியிலிருந்து விடுபட்டதல்ல என நிலப்படம் குறிப்பிடுகிறது. சமீப காலத்தில் கேரளத்தில் நிலநடுக்கத்தினால் ஏற்படும் விபத்துகள் பெருகிவருவதன் அடிப்படையில் கேரளத்தைப் பொதுவாக நிலநடுக்கத்தின் தீவிரம் உள்ள பகுதியாக் கணக்காக்கப்படுகிறது.

நாம் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பது பொருள். நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புகள் உள்ள இடங்களில் பெரிய கட்டிடங்கள் கட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.

## முன்னெச்சரிக்கைகள்

நிலநடுக்கத்தை தடுக்க இயலாது. ஆனால் அறிவியல் சார்ந்த செயல்கள் வழியாக இழப்புகளின் தீவிரத்தைக் குறைக்க இயலும். படம் 7. 7 உற்றுநோக்குங்கள். இவ்வளவு அதிகமான இழப்புகளுக்கான காரணம் கட்டிடங்களுக்கு நிலநடுக்கத்தை தாங்குவதற்கு இயலாதது ஆகும். நிலநடுக்கத்தில் அதிகம் பேர் பலியாவதும், காயமடைவதும் இடிந்து விழுகின்ற கட்டிடங்களுக்கு இடையே அகப்பட்டு ஆகும் எனவே

- நிலநடுக்கத்தை எதிர்கொள்வதற்கு இயலுகின்ற கட்டுமான முறைகளைக் கையாள வேண்டும்.
- பொதுவாக உயரம் குறைந்த மேற்கூரைகள் அதிக பாதுகாப்பு அளிக்கும்
- 

## வெள்ளப் பெருக்கு அச்சுறுத்தலும்...

சகியமலைச்சரிவுகளிலிருந்து உற்பத்தியாகி பாய்கின்ற 44 நதிகளின் நாடு தான் கேரளம். இவைகளில் அனைத்

### அடிதவறாமலிருக்க

லத்தூர் நிலநடுக்கத்தில் ஏராளமானோர் பலியாயினர். ஏராளமானோர் படுகாயமடைந்தனர். இடிந்த கட்டிடங்களுக்கிடையே அகப்பட்டு தான் அதிகமானோர் பலியாயினர். ஆனால் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும் ஜப்பானில் கட்டிடங்கள் இடிந்து ஏற்படும் விபத்துகள் மிகக் குறைவாகும். நிலநடுக்கத்தை எதிர்கொள்வதற்கு தகுதியான கட்டுமான முறையை அவர்கள் பின்பற்றுகின்றனர். நாம் வீடுகளை மெருகூட்டுவதற்குப் பதிலாக அவற்றின் உறுதியை அல்லவா உறுதிசெய்ய வேண்டியது?

### வெள்ளப் பெருக்கு: சில வரலாற்றுக் குறிப்புகள்

கேரளத்தில் ஏற்பட்டதாகக் கருதப்படுகின்ற வெள்ள பெருக்குகளில் மிகப் பழமையானது கிபி 371- இல் ஏற்பட்டதாகும். கி.பி.1341- இல் கேரளக்கடற்கரையில் ஏற்பட்ட நிலநடுக்கத்துடன் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டது. இதைக் குறித்து கிரேக்க ஞானியான பிளினி (சீனியர்) நேச்சுரல் ஹிஸ்டரி என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்

கேரளத்தில் இன்று வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் மிக வயது முதிர்ந்த நபர்களின் மனதில் நீங்காமல் நிற்கும் ஒன்றே 99-லுள்ள வெள்ளபெருக்கு. 99 என்றால் கொல்லவருடம் 1099. ஆங்கில் காலண்டரின் படி இது கிபி 1924 ஆகும்.



தும் மழைக்காலத்தில் ஏராளமான மழைநீர் ஒழுகி வந்து சேரும் போது நதிக ளுக்கு அந்த நீரை முழுவதும் உட்கொள்ள இயலாது.

அப்போது நதி நிரம்பி வழியும். இதுவே வெள்ள பெருக்கு. இமாலய நதிக ளில் குறிப்பாக பிரம்மபுத்திரா நதியின் பள்ளத்தாக்குகளில் அடிக்கடி வெள் ளப்பெருக்கு ஏற்படுவதுண்டு. இந்த நதியின் அருகிலுள்ள வளம்மிக்கப் பகு திகள் பொதுவாக கனமழை கிடைக்கும் இடங்களானதால் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. பள்ளத்தாக்குகளில் மட்டுமல்ல மலையோரப் பகுதிகளிலும் திடீரென வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. கனமழையைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கும் போதே நீர்மட்டம் உயரும் நிகழ்வே மழை வெள்ளம் பாய்தல் (Flash flood) என்ற பெயரில் அறியப்படுகிறது. சமீப காலத்தில் உத்ரகாண்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு இதற்கு எடுத்துக் காட்டாகும். பாலைவனங்களிலும் அபூர்வமான மழையைத் தொடர்ந்து இந்த நிகழ்வு ஏற்படுவதுண்டு.



*வெள்ளப் பெருக்கு குறித்த செய்திகளும் படங்களும் சேகரிக்கவும்.*

## வெள்ளப் பெருக்கு அச்சுறுத்தல் ஏற்படாமலிருக்க

வெள்ளப் பெருக்கு பெரும் விபத்தாக மாறாமலிருப்பதற்கு கீழே கூறப்பட் டுள்ள முன்எச்சரிக்கைகளைக் கையாள வேண்டும்.

- நதிக்கு அருகிலுள்ள இடங்களில் வீடுகட்டக் கூடாது.
- வயல்களை மண்போட்டு நிரப்பக்கூடாது. அவை மழைநீர் தாழ்ந்து இறங்குவதற்கான இடமாகும்.
- நதியோரங்களில் தடுப்புச் சுவர்கள் உருவாக்கல்.



*இயற்கைப் பேரழிவுக்கான வாய்ப்புகளை எளிமையாக்குவதற்குக் கையா ளவேண்டிய நடவடிக்கைகளை விளக்குகின்ற சுவரொட்டிகள் உருவாக் குங்கள். அவற்றைப் பொது இடங்களில் காட்சிப்படுத்தலாம்.*

## பேரிடர் மீட்பு- எளிமையாக்கும் செயல்

இயற்கைப் பேரிடர்களைத் தடைசெய்ய இயலாது. ஆனால் விவேகமான ஈடுபாடும். முன்னேற்பாட்டுச் செயல்களும் வழியாக அழிவுகள் உருவாக் கும் தீவிரத்தைக் குறைப்பதற்கும் மக்களைச் சாதாரண வாழ்க்கைக்குத் திருப் பிக் கொண்டுவருவதற்கும் துணை நிற்கும். இத்தகைய செயல்களைப் பொது வாக பேரிடர் மீட்பு எளிமையாக்கும் செயல்கள் எனக் கூறலாம்.

## இயற்கைப் பேரழிவுகளை எதிர்கொள்வோம்

பல்வேறு இயற்கைப் பேரழிவுகள் ஏற்படும் போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் நழுவு படத்தில் உள்ளது.

**பொதுநடவடிக்கைகள்**

- காயமடைந்தவர்களுக்கு உடனடியாக மருத்துவ உதவி கிடைக்கச் செய்தல்
- புரளிகளை நம்பாமல் இருக்கவும்
- விலை மதிப்புள்ள பொருட்கள் ஆவணங்கள் ஆகியவற்றை மட்டும் எடுத்துக் கொள்ளவும்.
- கொதித்து ஆறிய தண்ணீரை மட்டும் குடிக்கவும்.
- தேவையான மருந்துகளை எடுத்துக் கொள்ளவும்.
- 

**வெள்ளப்பெருக்கு**

- நதியோரத்தில் வசிப்பவர்கள் கூடிய சீக்கிரம் உயர்ந்த பகுதிகளுக்கு மாறிச்செல்லவும்
- அதிக ஒழுக்கு உள்ளபோது ஆற்றில் இறங்கக்கூடாது.
- வீட்டிற்குள் தண்ணீர் வந்தால் மின்தொடர்பைத் துண்டிக்கவும்.

**நிலச்சரிவு**

- செங்குத்தான சரிவுள்ள இடங்களிலிருந்து மாறி வசித்தல்
- மழைக்காலத்தில் கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

**இடிமின்னல்**

- மின் தொடர்பைத் துண்டிக்கவும்
- காலைத் தரையில் தொடாமல் மரக்கட்டிலில் அல்லது மரப்பலகை மேல் உட்காரவும்.
- திறந்த வெளிகளில் நாடி, கால் முட்டுகளின் மேல் வரும் வகையில் உட்காரவும்.
- தனியான மரங்களுக்கு கீழே நிற்கக் கூடாது.


**சுனாமி**

- கடலில் அசாதாரணமான ஏதேனும் மாற்றங்கள் அல்லது அதுதொடர்பான முன்னறிவிப்புகள் கிடைத்தால் உடனடியாக கரையிலிருந்து மாறவும்.
- லைப் ஜாக்கெட், வாயு நிரப்பப்பட்ட டியூப் இவற்றில் ஏதேனும் ஒன்றை எடுத்துக் கொள்ளவும்.

**நிலநடுக்கம்**

- இடிந்து விழுவதற்கு வாய்ப்புள்ள கட்டிடங்கள், விளம்பரப் பலகைகள் ஆகியவற்றின் அருகிலிருந்து அகன்று நிற்கவும்.
- தொடர்ச்சியான சலனங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதினால் அதிகாரபூர்வமான அறிவிப்பு கிடைப்பதுவரை வீடுகளுக்கு திரும்பக்கூடாது.
- திறந்த வெளிகள் தான் பாதுகாப்பானது
- வீட்டில் பாதுகாப்பான இடம் மூலைகளே
- லிப்ட்டைப் பயன்படுத்தக் கூடாது.
- ஜன்னல் அருகில் நிற்கக் கூடாது

பேரிடர் மீட்புச் செயல்பாடுகளுக்கு முக்கியமாக மூன்று நிலைகள் உள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ள நழுவுபடம் அதை விளக்குகிறது.




## பேரிடர் மீட்புச் செயல்களில் குழந்தைகளின் பங்கு


உங்களுடைய வீடு அல்லது பல்ளிக்கூடத்தின் அருகில் பேரிழப்பு நிகழ்ந்தால் மீட்புச் செயல்பாடுகளில் ஈடுபடும் பெரியவர்களுக்கு நீங்களும் உதவி செய்வீர்கள் அல்லவா? நாட்டிற்கும் சமூகத்திற்கும் நன்மை விளைவிக்கும் ஏராளமான செயல்களை உங்களால் செய்ய இயலும்.

அவற்றுள் சில:

- *அவசர நிலைகளில் மக்கள் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகளை விளக்கும் சிறு குறிப்புகள், துண்டுப்பிரசுரங்கள் ஆகியவை தயாரித்து விநியோகம் செய்யவும், பொதுஇடங்களில் காட்சிப்படுத்தவும் .*
- அறிவியல் சார்ந்த புவிப் பயன்பாட்டு முறைகளைக் குறிக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யவும்.
- 

## பாதுகாப்பான இடங்களைக் கண்டுபிடிப்போம்

ஒரு பள்ளிக்கூடத்தில் பேரிடர் மீட்புச் செயல்பாடுகளின் பாகமாகத் தயாரித்த பாதுகாப்பு பகுதிகளின் மாதிரிப்படமே படத்தில் ( படம் 7. 10) நீங்கள் பார்ப்பது. நிலநடுக்கம், நிலச்சரிவு, போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்




படம் – 7.10

போது அவை இழப்புகளாக மாறாமலிருப்பதற்கு சுய பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது இன்றியமையாதது. அதற்காகப் பள்ளிக் கூடத்தில் பாதுகாப்பான இடங்களைக் முன்னரே கண்டுபிடித்து வைக்கவும்.

கட்டிடங்களிலிருந்து அகன்று பள்ளிக்கூட மைதானத்தில் நடுப்பகுதியே மிகப்பாதுகாப்பான இடம். கட்டிடங்கள் இடிந்து விழுந்தாலும் அங்கே விழுவதில்லை என்ற காரணத்தினால் ஆகும். விபத்து நிகழ்ந்தால் ஆம்புலன்ஸ், பிற மீட்புப் பணிக்கான வாகனங்கள் போன்றவை வருவதற்கான வழி எது என்பதை முன்னரே தீர்மானிக்க வேண்டும். தடையாக இருக்கும் ஒன்றையும் அங்கே நிறுவக்கூடாது. பாதுகாப்பான இடங்களை அனைவரும் புரிந் து கொள்ளும் படி அடையாளப்படுத்தி வைக்க வேண்டும். இடையிடையே இத்தகைய பேரழிவுச் சூழல்களை எதிர் கொள்வதற்கான மாதிரிப் பயிற்சி (மோக்டிரில்) நடத்த வேண்டும்

## பேரிடர் மீட்புக் கான அரசின் அமைப்புகள்

கேரளத்தில் மீட்புப் பணியை எளிமையாக்கும் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பு கேரள மாநில பேரிடர் மீட்புக் குழுவிற்காகும் (Kerala State Disaster Management Authority (KSDMA)). இந்தக் குழுவின் கீழ் மாநில அவசரகால செயலாக்க மையம் (State Emergency operation centre(SEOC) எல்லா மாநிலங்களிலும் பேரிடர் மீட்புச் செயல்களை மேற்பார்வை இடுகிறது. அவசர காலங்களில் மாநிலம் முழுவதும் கையாள வேண்டிய நடவடிக்கைகள் பேரிடர் வாய்ப்புக்கான முன்னறிவிப்புகள் ஆகியவற்றை மாவட்டங்களுக்கு அளிக்கிறது. மாவட்ட அவசரகால செயலாக்க மையங்களுக்கு( DEOC)அந்தந்த பகுதியிலுள்ள பேரிடர் மீட்பு எளிமையாக்கும் செயல்பாடுகளின் பொறுப்பு உள்ளது. மக்களுக்குத் தேவையான முன்னறிவிப்புகளை வழங்குவது இந்த மையங்கள் வழியாகும். விபத்து ஏற்பட்டால், ஆரோக்கியம், ஒழுங்குநிலை, தீயணைப்பு பொதுப்பணித்துறை ஆகிய பல்வேறு அரசுத்துறைகளை ஒருங்கிணைத்துக் கொண்டு மீட்புச் செயல்பாடுகளைச் செயல்படுத்துவது என்பதே இந்த மையங்களின் கடமை. கூடுதல் தகவல்களுக்கு www.sdma.kerala.gov.in என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

## பாதுகாப்பான நாளைக்கு

நான்கரை கோடி வருடம் என்ற புவியின் நீண்ட வரலாற்றின் நிகழ்ப் பரம்பரைகளில் கடைசித் தொடர்தான் மனிதன்.இயற்கையில் சுத்தமான வாயுவும்

தெளிந்த நீரும், மண்ணின் வளமும், பச்சைப் பசுமையும் நம்மால் அனுபவ கிக்க இயல்வதும் நமக்கு முன்பு இங்கே வாழ்ந்து கடந்து சென்ற உயிரினங்க ளனைத்தும் அவற்றை நமக்காக ஒதுக்கி வைத்ததால் ஆகும். பேராசையி னால் அவை முழுவதும் ஒன்றாக கையடக்க முயன்றால் அதன் விளைவு பெரிய இழப்பாகும். நம்முடைய மட்டுமல்ல வரப்போகும் எத்தனையோ உயி ரினங்களுடையவும், தலைமுறைகளுடையவும் தேவைக்காக இந்த இயற்கை வளங்களைப் பாதுகாத்து வைக்க வேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு.



## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- சுற்றுப்புறத்தைக் குறித்து விளக்குவதற்கு இயலுகின்றது.
- சுற்றுப்புறத்தின் வேற்றுமைகளைப் பிரித்தறிந்து விளக்குவதற்கு இயலுகிறது.
- மக்கள் வாழ்க்கையில் சுற்றுப்புறத்தின் தாக்கத்தைத் தெளிவுபடுத்த இயலுகிறது.
- சுற்றுப்புறத்தில் மனிதன் ஏற்படுத்திய மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு இயலுகிறது.
- இயற்கை நிகழ்வுகளைப் பிரித்தறிந்து குறிப்பிடுவதற்கு இயலுகிறது.
- இயற்கைச் சீற்றங்களையும், இயற்கைப் பேரழிவுகளையும் வேறு படுத்தவும் விளக்கவும் இயலுகிறது.
- இயற்கைப் பேரழிவுகளுக்குக் காரணமான மனிதச் செயல்களைப் பகுப்பாய்வு செய்து அறிவியல் சார்ந்த புவிப் பயன்பாடு முறை களை விளக்குவதற்கு இயலுகின்றது.
- பேரிடர் மீட்பு எளிமையாக்கல் செயல்பாடுகளின் விளக்கங்களைத் தெளிவுபடுத்துவதற்கு இயலுகிறது.
- அறிவியல் சார்ந்த முறையில் புவியைப் பயன்படுத்தும் முறைக ளைப் பின்பற்றும் மனப்பான்மை உருவாகிறது.
- பேரிடர்மீட்பு எளிமையாக்கல் செயல்பாடுகளில் ஈடுபடும் மனப்பான்மை உருவாகிறது



## மதிப்பிடலாம்

- வெள்ளப் பெருக்கு என்ற இயற்கைப் பேரழிவு ஏற்படும் சூழல்க ளில் என்னென்ன முன்னேற்பாடுகளைக் கையாள வேண்டும்?
- இயற்கைப் பேரழிவுகள் ஏற்படும் போது கையாள வேண்டிய பொது நடவடிக்கைகள் யாவை?



## தொடர்செயல்பாடு

- அறிவியல் முறையில் நிலப் பயன்பாட்டு முறைகளை விளக்கு கின்ற விளக்கப்படங்கள், சிறுகுறிப்புகள் ஆகியவை தயாரிக்கவும் அவற்றைப் பொது இடங்களில் காட்சிப்படுத்தவும்.



# 8

# மக்கட்தொகை, குடியேற்றம், குடியிருப்புகள்




2011 மக்கட்தொகை கணக்கெடுப்பின் படி இந்தியாவின் மக்கட் தொகை குறித்த சில அடிப்படைத் தகவல்களைக் கவனித்தீர்கள் அல்லவா? மக்கள் தொகை என்றால் என்ன மக்கட் தொகை தொடர்பான தகவல்களைக் கற்கவேண்டிய தன் தேவை என்ன? எல்லா இடங்களிலும் மக்கட்தொகை பரவல் ஒன்றுபோல் உள்ளதா? மக்கட் தொகை பரவலைக் கட்டுப்படுத்தும் காரணிகள் யாவை? இவற்றுள் புவியியல் காரணிகளின் பங்கு என்ன? மக்கட்தொகை கூடுவதற்கும் குறைவதற்கும் உள்ள காரணங்களும் அதன் பலன்களும் எவையாக இருக்கும்?



ஒரு நாட்டின் வளங்கள், வளங்களின் பரிமாற்றம் போன்ற துறைகளில் மக்கட் தொகை கணக்குகளின் பங்கு மிக முக்கியமானது. மேற்குறிப்பிட்ட வினாக்க ளுக்கு விடை கண்டுபிடிப்பதன் வழியாக இது தெளிவாகும். அதற்காக நாம் இந்த அலகின் வழியாக கடந்து செல்வோம்.

ஒரு இடத்தில் குறிப்பிட்ட கால அளவில் வசிக்கக் கூடிய மக்களின் மொத்த எண்ணிக்கைதான் அங்குள்ள மக்கட்தொகை (Population). ஒரு நாடு அறியப் படுவது அங்குள்ள மக்கள் வழியாக அல்லவா? அது ஏனெனில். வளங்களை உற்பத்திக்காகப் பயன்படுத்துவதும் நாட்டின் கொள்கைகளை உருவாக்குவதும் மக்களாகும். எனவே மனிதவளமே உண்மையான செல்வம் என்று கூடக் கூற லாம்.

மனித நலன் தான் முன்னேற்றத்தின் அடிப்படை இதற்காக உணவு , உடை வாழிடம் , தொழில், பிற அடிப்படை வசதிகள் போன்றவை உறுதி செய்ய வேண் டும். நாட்டின் மக்கள்தொகை தொடர்பான தகவல்களைச் சேகரித்து பகுப்பாய்வு செய்தால் மட்டுமே கிடைத்த வளங்களைச் சரியாகப் பயன்படுத்தி மேம்பாட் டுச் செயல்பாடுகளைச் செயல்திறனுடையதாக்கத் திட்டமிட முடியும்.



*மக்கட்தொகை கணக்குகளின் ஆய்விற்குத் தேவையான துறைகள் எவை யென்பதை எழுதிப் பாருங்கள்.*

- உணவு தானிய உற்பத்தியை முன்கூட்டியே திட்டமிடுவதற்கு.
- வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு.
- 



*மக்கட்தொகை அளவுக்கதிகமாக உயருவது நாட்டின் முன்னேற்றத் திற்கு சிறந்ததா? ஏன்?*

## மக்கட் தொகை பரவல்


இந்தியாவின் மக்கட்தொகை பெருக்கத்தைக் காட்டும் நிலப்படத்தை கவனியுங் கள்( படம் 8.1) மக்கட்தொகை அதிகமாக மையம்கொண்டுள்ள இடங்களும் மக் கட்தொகை குறைவான இடங்களும் இதிலிருந்து தெரிந்து கொள்ள இயலுமல் லவா?



- *அதிகமக்கட்தொகை உள்ள மாநிலங்கள் எவை?*
- *மக்கட் தொகை மிகக் குறைவான மாநிலங்கள் எவை?*

இந்தியாவில் மக்கட்தொகை நிலப்படத்தை உலகப் படத்தின் இயற்கையமைப்பு பிரிவுகளைக் காட்டும் நிலப்படத்துடன் ஒப்புமை செய்து பாருங்கள்.

- வட இந்தியச் சமவெளியில் மக்கட்தொகை கூடுதலாகக் காணப்படுவதைப் பார்த்தீர்களல்லவா? இதன் காரணம் என்ன?




படம் 8.1


(ஆதாரம் : இந்திய மக்கட்தொகை கணக்கெடுப்பு 2011)

- தீபகற்ப பீடபூமியில் பொதுவாக மிதமான மக்கட்தொகையைத்தானே பார்க்க முடிந்தது. சம வெளிகளைப் போன்று வேளாண்மைக்குப் பொருத்தமற்ற சூழல்கள் மற்றும் போக்குவரத்து வசதி குறைவும் இதற்குக் காரணம், ஆனால், தீபகற்ப பீட பூமியின் கனிமப் பொருட்களின் வெட்டி எடுத்தல், கனிமப் பொருட்கள் சார்ந்த தொழில்கள் போன்ற செயல்கள் சில இடங்க ளில் உயர்வான மக்கள்வாழிடங்களாக மாற்றுகிறது. போக்குவரத்து– செய்தித் தொடர்புத் துறை களில் முன்னேற்றம் இதற்கு ஊக்கம் அளிக்கிறது.



*மலைப்பகுதி உட்பட்ட மாநிலங்களில் மக்கட்தொகை எவ்வாறு உள்ளது? ஏன்?*

மக்கட்தொகை விகிதத்தில் இயற்கையமைப்பின் தாக்கத்தைப் புரிந்துகொண்டீர்கள் அல்லவா? எந்தெந்த புவியியல் காரணிகள் மக்கட்தொகை பரவலில் தாக்கம் செலுத்துகிறது என்றுப் பாருங்கள்.






*மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு காரணியும் மக்கட்தொகை பரவலில் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பதை விவாதித்து சிறு குறிப்பு எழுதுங்கள்.*

இந்தியாவின் மொத்த நிலப்பரப்பு 3. 28 தச லட்சம் கிலோமீட்டராகும். அதாவது உலகத்தின் மொத்த நிலப்பரப்பில் 2.5%.ஆனால் இந்தியா உலக மக்கட்தொகையின் 17.5% யைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு சதுரகிலோமீட்டர் இடமும் சராசரி 382 நபர்களை உள்ளடக்குகிறது என இதன் வழியாகக் கணக்கிடலாம். இதுவே இந்தியாவின் மக்கட்தொகை அடர்த்தி. ஒவ்வொரு சதுரகிலோமீட்டர் இடங்களிலுமுள்ள சராசரி மக்கட் தொகையை மக்கள் அடர்த்தி என அழைக்கலாம். (Density of population). ஓர் இடத்திலுள்ள மக்கட்தொகையை நிலப்பரப்பால் வகுத்தால் மக்கள் தொகை அடர்த்தியைக் கணக்கிடலாம்

$$\text{மக்கள் அடர்த்தி} = \frac{\text{மொத்த மக்கட்தொகை}}{\text{நிலப்பரப்பு}}$$




*மிக அதிக மக்கட்தொகை கொண்ட நாடு சீனாவாக இருந்தாலும் அங்குள்ள மக்கள் அடர்த்தி இந்தியாவைவிட குறைவாகும் காரணம் என்ன?*

மக்கள் அடர்த்தியில் வங்காளதேசம்,ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு அடுத்து மூன்றாவது இடத்தில் இந்தியா உள்ளது.இந்தியாவின் மக்கட் தொகை அடர்த்தியில் வெளிப்படையான வட்டார வேற்றுமைகள் நிலைநிற்கிறது. 2011 மக்கட் தொகை கணக்கெடுப்பின் படி ஒரு சதுர கிலோமீட்டரில் 17பேர் மட்டுமுள்ள

அருணாச்சலபிரதேசம் மக்கட்தொகை அடர்த்தியில் மிகவும் பின்தங்கிய நிலையி லும். சதுர கிலோமீட்டரில் 11297 பேர் வாழும் டெல்லி மிக முன்னிலும் உள்ளது. மாநிலங்களில் பீகாரில் மிக அதிக மக்கள் அடர்த்தி ( 1102) காணப்படுகிறது

*டெல்லியில் அதிக மக்கள் அடர்த்திக்கான காரணம் என்ன?*

நிலப்படம் ( படம் 8.2) உற்றுநோக்கி இந்தியாவின் மாநிலவாரியான மக்கள் அடர்த் தியைப் புரிந்து கொள்ளுங்கள்..




படம் 8.2

(ஆதாரம் : இந்திய மக்கட்தொகை கணக்கெடுப்பு 2011)



*இந்திய மாநிலங்களை மக்கள் தொகை அடர்த்தியின் அடிப்படையில் வகைப் படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரியில் அட்டவணைப்படுத்துங்கள்*

| மக்கள்தொகை அடர்த்தி | பிரிவுகள் | மாநிலங்கள் |
|---|---|---|
| 100 -க்கு குறைவாக | மிகக்குறைந்த மக்கள் அடர்த்தி | |
| 101 முதல் 250 வரை | குறைந்த மக்கள் அடர்த்தி | |
| 251 முதல் 500 வரை | சராசரி மக்கள் அடர்த்தி | |
| 501 முதல் 1000 வரை | உயர்ந்த மக்கள் அடர்த்தி | |
| 1000-க்கு மேலாக | மிக உயர்ந்த மக்கள் அடர்த்தி | |

இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்துக்கும் வெவ்வேறு மக்கள் அடர்த்தி உள்ளது என்பதைப் பார்த்தீர்கள் அல்லவா?.



- *2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி கேரளத்தின் மக்கள் அடர்த்தி எவ்வளவு?*
- *மக்கள் அடர்த்தியின் அடிப்படையில் கேரளம் எந்த இடத்தில் உள்ளது?*

நிரப்பான நில அமைப்பு, மிதமான காலநிலை, வேளாண்மைக்கு ஏற்ற வளம் நிறைந்த மண்வகைகள், சுத்தமான குடிநீர் வசதி போன்ற முக்கிய புவியியல் காரணிகள் தான் சில இடங்களில் உயர்ந்த மக்கள் அடர்த்திக்கு அடிப்படைக் காரணம். மேலும் கனிமப் பொருட்கள் கிடைக்கும் இடங்களிலும் தொழில் துறைகளில் பெருகி வரும் வேலைவாய்ப்புகளும், தலைநகரங்களை மையமாகக் கொண்டு கவர்ச்சியூட்டும் அடிப்படை வசதிகளும் மற்றும் சேவைகளும் இத்தகைய பகுதிகளில் உயர்ந்த மக்கள் அடர்த்திக்கான காரணமாகிறது. மக்கள் அடர்த்தியில் சமநிலையற்ற நிலைக்கான காரணங்களையும் அதில் புவியியல் காரணிகளின் பங்கையும் உணர்ந்து கொண்டீர்கள் அல்லவா?.

ஒரு பகுதியிலுள்ள மக்கட்தொகையில் மாற்றம் உருவாவது எப்படி எனப் பார்ப்போம்.

## மக்கட்தொகை வளர்ச்சி

குறிப்பிட்ட கால அளவில் ஒரு பகுதியில் வசிக்கின்ற மக்களின் எண்ணிக்கையில் உண்டாகும் மாற்றமே மக்கட் தொகை வளர்ச்சி எனப்படும். இது பொதுவாக விழுக்காடுகளில் கணக்கிடப்படுகிறது. இந்தியாவின் பத்தாண்டு கால வளர்ச்சி விகிதம் 17.7 சதவீதம் ஆகும்.

அதாவது 2001 -இல் உள்ள மக்கட்தொகையை விட 17.7% . 2011 -இல் இந்தியாவில் கூடியுள்ளது. இவ்வாறு மக்கட்தொகையில் உண்டாகும் வளர்ச்சியைச்

சாதகமான மக்கட்தொகை வளர்ச்சி எனக்கூறலாம் (Positive growth of population).

ஒரு பகுதியிலுள்ள மக்கட்தொகை குறைகின்ற சூழ்நிலைகளும் உருவாவதுண்டு. இதை மக்கள் தொகையின் பாதகமான வளர்ச்சி (Negative growth of population) எனக்கூறலாம்.

மக்கள் தொகையில் மாற்றம் ஏற்படுவதற்கான காரணங்கள் எவையெனப் பார்ப்போம்

- பிறப்பு விகிதம்
- இறப்பு விகிதம்
- குடியேற்றம்

மக்கட்தொகைப் பெருக்கத்தில் தாக்கம் செலுத்தும் இயல்பான காரணிகளே பிறப்பு விகிதமும், இறப்பு விகிதமும் ஆகும். உயர்ந்த பிறப்பு விகிதமும், குறைவான இறப்பு விகிதமும் மக்கட் தொகைப் பெருக்கத்திற்குக் காரணமாகலாம். மரணவிகிதம் உயர்வது மக்கட்தொகை குறைவதற்குக் காரணமாகலாம்.


*ஒரு நாட்டின் பிறப்பு, இறப்பு விகிதங்கள் சமமாக இருந்தால் என்ன நிகழும்?*



நவீன உலகில் மக்கள்தொகைப் பெருக்கத்தில் தாக்கம் செலுத்தும் ஒரு முக்கிய காரணியே குடியேற்றம் ஆகும்

## குடியேற்றம்

ஓர் இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ மக்கள் மாறிவாழ்வதைக் குடியேற்றம் என்று கூறுவர். இங்கு பல நிலைகளிலுள்ள குடியேற்றங்கள், நழுவுபடத்தில் தரப்பட்டுள்ளது.




KT-535-4/Soc. Sci. II-9 (T) Vol-2

நாட்டின் எல்லை கடந்து குடியேறுவதைச் சர்வதேசக் குடியேற்றம் (International migration) என்று கூறுவர். ஒரு நாட்டிற்கு வந்து சேர்வதைச் சர்வதேச வருகை (Immigration) எனவும், நாடு விட்டு வேறொரு நாட்டிற்கு குடியேறுவதைச் சர்வ தேசக் குடிபெயர்தல் (Emigration) என்றும் கூறலாம்.



படம் 8.3

வெளி நாடுகளில் வேலை செய்கின்ற தமிழர் கள் சர்வதேசக் குடியேற்றத்திற்கு சிறந்த எடுத் துக்காட்டாகும் (படம் 8.3)



*கேரளத்தில் சர்வதேச விமானநிலை யங்கள் மூன்று உள்ளன. இந்தச் சிறிய மாநிலத்தில் இவ்வளவு சர்வதேச விமானநிலையங்கள் உருவாவதற்கு கார ணம் என்ன?*

நாட்டின் எல்லைகளுக்கு உள்ளேயே உள்ள குடியேற்றங்கள் உள்நாட்டு குடியேற்றங்களாகும் (Internal migration). இத்தகைய குடியேற்றங்க ளுக்கான முக்கிய காரணம் தொழிலாகும். நாட் டில் சிறந்த வேலையும் கூலியும் கிடைக்கும் இடங்களுக்கு மக்கள் குடியேறுவதுண்டு.



படம்( 8.4) பிற மாநிலத் தொழிலாளிகள்

சமீப காலத்தில் கேரளத்தில் கட்டுமானத்துறை யில் பெருகி வரும் வடஇந்திய தொழிலாளிகள் இத்தகைய குடியேற்றத்திற்கு எடுத்துக்காட்டா கும். படம் (8.4)



*இவர்கள் அதிக அளவில் கேரளத்தில் குடியேறுவதற்கான காரணம் என்ன?*

இவ்வாறு ஒரு மாநிலத்திலிருந்து வேறொரு மாநிலத்திற்கு குடியேறுவதை மாநி லக் குடியேற்றம் (Interstate migration) என்று கூறுவர்.

மாநிலங்களுக்கு உள்ளேயே மக்கள் பல்வேறு காரணங்களால் மாறித் தங்கு வதை உள்மாநிலக் குடியேற்றம் (Intrastate migration) எனக்கூறலாம். மாவட்ட எல்லைக் கடந்த குடியேற்றங்களை மாவட்டக் குடியேற்றம் (Interdistrict migration) எனக்கூறுவர்.

20-ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் மத்திய திருவிதாங்கூரிலிருந்து மல பாரை நோக்கியுள்ள அதிக அளவிலான விவசாயிகளின் குடியேற்றங்கள் மாவட்ட குடியேற்றங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும். திருமணம், கல்வி போன்ற காரணங்களால் ஒரு மாவட்டத்திற்குள்ளேயே மக்கள் குடியேறுவதுண்டு. இத்த கைய குடியேற்றங்கள் உள்மாவட்ட குடியேற்றங்கள் (Intradistrict migration) எனப்படும்.

மேற்குறிப்பிட்ட குடியேற்றங்கள் எல்லாம் நான்கு வகையில் நடைபெறுகிறது.

- கிராமத்திலிருந்து கிராமத்திற்குள்ளேயே குடியேற்றம்.
- கிராமத்திலிருந்து நகரத்திற்கான குடியேற்றம்.
- நகரத்திலிருந்து நகரத்திற்குள்ளேயே குடியேற்றம்.
- நகரத்திலிருந்து கிராமத்திற்கான குடியேற்றம்.

*பலவகையான குடியேற்றங்களுக்கு கூடுதல் எடுத்துக்காட்டுகளை விவாதித்து கண்டுபிடிக்கவும்.*



## குடியேற்றம் எதற்காக?

நமது நாட்டிலிருந்து வேலை தேடி வெளிநாடுகளிலும் இந்தியாவிலேயே பிற நகரங்களிலும் ஏராளமான மக்கள் குடியேறியுள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? உலகின் முன்னேற்றத் துறைகளிலுள்ள வேலைவாய்ப்புகளே இத்தகைய குடியேற்றங்களுக்கான காரணம். இருபதாம் நூற்றாண்டின் இரண் டாம் பகுதியில் மேற்கு ஆசிய நாடுகளில் பரவலாகக் காணப்பட்ட பெட்ரோ லிய சுரங்கங்கள் உருவாக்கிய வேலைவாய்ப்புகள் தான் வளைகுடா நாடு களுக்கு இத்தகைய குடியேற்றங்களைக் கவரக்கூடிய காரணியாகும் .

*வேலைவாய்ப்புகளைத் தவிர வேறென்னென்ன கவர்ச்சிக் காரணிகள் (Pull factors) குடியேற்றத்தைத் தூண்டுகிறது என்று கண்டுபிடியுங்கள்..*



- உயர்க்கல்வி வசதிகள்
- 
- 
- 
- 

### ஐரோப்பாவிற்கு அதிக அளவில் அகதிகள் வருகை

*டெல் அவீவ்: 10 செப்டம்பர் 2015*

முன்பு எங்கும் பார்த்திராத வகையில் அகதிகள் வரு கைக்கு ஐரோப்பா சான்று பகர்ந்து வருகிறது. கடந்த நாட்களில் ஆயிரக்கணக்கானோர் ஐரோப்பாவில் அகதிகளாக வந்தனர். சிரியாவில் ஏற்பட்ட உள்நாட்டு போரில் பாதுகாப்புத் தேடியே இந்த வருகை.



செய்தித் துணுக்கைக் கவனித்தீர்கள் அல்லவா? சிரியாவின் உள்நாட்டு கலகம் காரணமாக ஆயிரக்கணக்கானோர் அகதிகளாகப் பாதுகாப்பிற்காக ஐரோப்பா நாடுகளுக்கு குடியேறுகின்றனர். இந்தக் குடியேற்றத்திற்கான காரணம் ஒரு வலுக் கட்டாயமான காரணியாகும்



*குடியேற்றத்திற்குக் காரணமான பிற கட்டாயக் காரணிகள் (Push factors) எவையென்பதைக் கண்டுபிடியுங்கள்*

- வளங்களின் குறைபாடு
- வேலையின்மை
- அரசியல் பாதுகாப்பற்ற நிலை
- இயற்கை அழிவு
-
-

சில பகுதிகளிலுள்ள கவரும் காரணிகளால் மக்கள் சுய விருப்பத்துடன் செல்லும் குடியேற்றங்களைத் தன்னிச்சையான குடியேற்றங்கள் (Voluntary migration) என்று கூறலாம். தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் கட்டாயமாக நடைபெறும் குடியேற்றம் கட்டாயக் குடியேற்றம் (Forced migration) எனப்படும்.

## குடியேற்றத்தின் விளைவுகள்

மனித வளங்களின் மறுசீரமைப்பு குடியேற்றம் வழியாக நிகழ்கிறது. இது குடியேறுபவர்களை ஆரம்ப இடங்களிலும் குடியேறிச் செல்லும் பகுதிகளிலும் சமூக - பொருளாதார- பண்பாட்டுத்துறைகளில் முக்கிய பங்கு மாற்றங்களுக்குக் காரணமாகிறது.

குடியேற்றத்தின் விளைவுகள் எவையென்பதைப் பாருங்கள்.

- மனிதவள கைமாற்றத்திற்கு வாய்ப்பளிக்கிறது.
- தாய்நாட்டிற்கு வெளிநாட்டுப் பணம் கிடைக்கிறது.
- சில இடங்களில் அதிக மக்கட்தொகைக்கு வழிவகுக்கிறது
- வளங்களின் அளவு குறைவதற்கு வழிவகுக்கிறது.
- தொழில்நுட்ப கைமாற்றத்திற்கு வாய்ப்பளிக்கிறது.
- அதிக வேலைவாய்ப்புகள் கிடைக்கிறது.
- மக்களுக்கிடையே சமூக உறவுகள் அற்றுப்போகிறது.
- சேரிகளின் உருவாக்கத்திற்குக் காரணமாகிறது.
- தொற்றுநோய்கள் பரவுகிறது.
- உயர்க்கல்விக்கு வாய்ப்பு கிடைக்கிறது.
- மக்கட்தொகையில் ஆண்- பெண் சமநிலை இல்லாமல் போகிறது.
- நிபுணர்களுடையவும் இளைஞர்களுடையவும் சேவை நாட்டிற்கு நஷ்டமாகிறது.
- வளங்கள் நஷ்டமாகிறது.
- சுற்றுச்சூழல் மாசடைதல் தீவிரமாகிறது.

*மேற்குறிப்பிட்ட கருத்துகளை வகுப்பில் விவாதித்து குடியேற்றத்தின் நன்மைகள் தீமைகள் என வகைப்படுத்தி அட்டவணைப்படுத்தவும். இரு பிரிவிலும் கூடுதல் விளைவுகளைக் கண்டுபிடித்து கூடுதலாகச் சேர்ப்பீர்கள் அல்லவா.*



| நன்மைகள் | தீமைகள் |
|---|---|
| <br>•<br>• | •<br>•<br>• |

## பயிற்சித்தாள்

சில முக்கிய குடியேற்றங்கள் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் வாசித்து எந்த வகை குடியேற்றத்தில் உட்படுகிறது என்பதைப் பிரித்தறிந்து பொருத்தமான கட்டங்களில் (✓) குறியீட்டைப் போடவும்.

| குடியேற்றங்கள் | சர்வதேசக் குடியேற்றம் | உள்நாட்டுக் குடியேற்றம் | கட்டாயக் குடியேற்றம் | கவரும் குடியேற்றம் |
|---|---|---|---|---|
| • இந்தியாவுக்கு ஐரோப்பிய குடியேற்றங்கள். | ✓ | | | ✓ |
| • மத்திய திருவிதாங்கூரிலிருந்து மலபாருக்கான குடியேற்றங்கள். | | | | |
| • கேரளத்திற்கு பிறமாநில தொழிலாளிகளின் குடியேற்றம். | | | | |
| • இலங்கை உள்நாட்டு கலவரத்தைத் தொடர்ந்து இந்தியாவுக்குள்ள குடியேற்றம். | | | | |
| • கேரளத்தின் நகரங்களிலிருந்து பெங்களுருக்குள்ள தொழில்நுட்ப வல்லுநர்களின் குடியேற்றம். | | | | |
| • வளைகுடா நாடுகளுக்கு மலையாளிகளின் குடியேற்றம். | | | | |
| • கேரளத்தில் திருமணம் சார்ந்த குடியேற்றம். | | | | |
| • சிரியாவில் உள்நாட்டு கலவரங்களைத் தொடர்ந்த குடியேற்றம். | | | | |
| • இந்தியாவில் சுனாமி ஏற்பட்ட இடங்களிலிருந்து மறுவாழ்வு மையங்களுக்கான குடியேற்றம். | | | | |

## குடியிருப்புகள் (Settlements)

மனிதனின் வேளாண் பண்பாட்டிற்கு சுமார் 12000 ஆண்டு பழமையுடையதாக கணக்காக்கப்படுகிறது. தேவையான உணவுப் பொருட்களை வேளாண்மை செய்து உற்பத்தி செய்யத் தொடங்கிய போது வேளாண்நிலங்களோடு சேர்ந்து வாழிடங்கள் உருவானது. பிற்காலத்தில் உருவான பல்வேறு மனிதச் செயல்களும் குடியேற்றங்களும் வெவ்வேறு வகையான குடியிருப்புகள் உருவாவதற்கு காரணமானது. நிலையானதாகவோ, தற்காலிக வாழிடங்களாகவோ பல்வேறு அளவுகளில் காணப்படும் வாழிடங்களின் கூட்டத்தைக் குடியிருப்புகள் (Settlements) என்று அழைக்கலாம்.



*எல்லாப் பகுதிகளிலும் குடியிருப்புகளின் ஒழுங்கு ஒன்று போலுள்ளதா?*

வாழிடங்களின் இடங்களைத் தேர்வு செய்வதில் முக்கியமாக கருத்திற் கொள்ளும் காரணிகள் எவையென்பதைப் பாருங்கள்.

- பொருத்தமான காலநிலை
- நீர்வசதி
-
-

மக்கட்தொகை, முக்கிய பொருளாதாரச் செயல்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் மனித குடியிருப்புகளை இரண்டாகப் பிரிக்கலாம்.

- கிராமப்புற குடியிருப்புகள்
- நகர்ப்புற குடியிருப்புகள்

## கிராமப்புற குடியிருப்புகள் (Rural Settlements)

பொதுவாக குறைவான மக்கட்தொகை உடையதும் மக்கள் முக்கியமாக வேளாண்மையை சார்ந்து வாழக்கூடியதுமான பகுதிகளைக் கிராமப்புறக் குடியிருப்புகள் என்று அழைப்பர். சுற்றுப்புறத்தலிருந்து கிடைக்கும் கச்சாப் பொருட்களைப் பயன்படுத்தி பொதுவாகக் குடியிருப்புகளை உருவாக்குவர்.

### பல்வேறு வகை கிராமப்புற குடியிருப்புகள்



படம் 8.5 மையக்குடியிருப்புகள்

வாழிடங்களின் அமைப்புகளுக்கேற்ப பொதுவாக இரு வகையிலான கிராமப்புற குடியிருப்புகள் காணப்படுகிறது.

படங்களைக் கவனியுங்கள். இதில் வாழிடங்களுக்கு இடையிலான தூரத்தில் என்ன வேற்றுமையை நீங்கள் பார்க்கிறீர்கள்?

பொருத்தமான சூழ்நிலைகள் உள்ள பகுதிகளில் அடுத்தடுத்து ஏராளமான வாழிடங்கள் மையம் கொண்டுள்ளது. இத்தகைய மக்கள் வாழ் மண்டலங்களை மையக்குடியிருப்புகள் (Nucleated settlements) என்று

கூறுவர். படம் 8.5 செழிப்பான நதிக்கரையின் சம வெளிகளில் இத்தகைய குடியிருப்புகள் உருவா கிறது. மக்களுக்கிடையே உயர்ந்த சமூக உறவும் தொழிலின் இணையான தன்மையும் இத்தகைய குடியிருப்புகளின் சிறப்பம்சங்களாகும்.



படம் 8.6 *சிதறிய குடியிருப்புகள்*

இரண்டாவது படத்தில் காண்பதைப் போன்று குடி யிருப்புகள் ஒன்றுக்கொன்று அகன்று நிலை கொள்ளும் மக்கள் வாழ் மண்டலங்களைச் சிதறிய குடியிருப்புகள் (Dispersed settlements) (படம் 8.6) என்றழைக்கப்படுகிறது. உயரமான இயற்கையமைப்பும் பிற பொருத் தமற்ற சூழல்களும் மக்கள் தனிப்பட்டு வாழ்வதற்குக் காரணமாகிறது. வழிபாட் டுத் தலங்கள், வியாபார மையங்கள் போன்ற பண்பாட்டு சிறப்பம்சங்கள் இங் குள்ள மக்களை ஒருங்கிணைக்கின்றது.

*உங்களுடைய வீடு மைய குடியிருப்பில் உட்பட்டதா? சிதறிய குடியிருப்பில் உட்பட்டதா?*



மேலே குறிப்பிடப்பட்டவையிலிருந்து வேறுபட்டு வீடுகள் முழுமையும் நெருங் கியதோ, சிதறியதோ அல்லாத பகுதிகள் உள்ளன. இத்தகைய வாழிடங்கள் அரைமையக் குடியிருப்புகள் (Semi-clustered settlements) என்றழைப்பர்.

உயர்வான மக்கட்தொகையும் இடப்பற்றாக்குறையும் காரணமாக கேரளத்தில் மேற்குறிப்பிட்ட வகையிலான கிராமப்புற குடியிருப்புகளை வேறுபடுத்தி பார்க்க இயலாது என்பதை நினைவுகூர்வீர்களல்லவா?

## கிராமப்புற குடியிருப்பு மாதிரிகள்

போக்குவரத்து வசதி, குடிநீர் வசதி போன்ற பொருத்தமான காரணிகளின் அடிப் படையில் நெருங்கிய குடியிருப்புகள் வெவ்வேறு வடிவங்களைக் கொண்டுள் ளன. ஒரு கூட்டம் குடியிருப்புகள் உயர்வான பகுதிகளிலிருந்து உற்றுநோக்கி னால் பல்வேறு வடிவங்களைக் காணமுடியும். படத்தை உற்றுநோக்கி இத்தகைய சில வடிவங்களைப் புரிந்து கொள்ளுங்கள்.

மேற்குறிப்பிட்டவை தவிர வட்டார சூழல்களுக்கேற்ப சதுரவடிவம், முக்கோண வடிவம் போன்ற பல்வேறு வடிவங்களில் கிராமப்புற குடியிருப்புகள் உருவா வதுண்டு.



கோட்டு வடிவம் (Linear pattern)

- சாலை, நதி, கடற்கரை ஆகியவற்றிற்கு இணையாக வளர்ந்து வரும் குடியிருப்பு மாதிரி




வட்ட வடிவம் (Circular pattern)

- நீர்நிலைகள், புல்வெளிகள் வழிபாட்டு தலங்கள் போன்ற சிறப்பம்சங்களைச் சுற்றி உருவாகும் குடியிருப்பு மாதிரி

குடியிருப்பு மாதிரிகள்

(படம் 8.7)



நட்சத்திர வடிவம் (Star pattern)

- பல்வேறு சாலைகள் இணையும் இடங்களில் உருவாகும் குடியிருப்பு மாதிரி.

## நகர்ப்புற குடியிருப்புகள் (Urban settlement)

பொதுவாக உயர்ந்த மக்கட்தொகை உடையதும் மக்கள் வேளாண்மை தவிர பிற துறைகளைச் சார்ந்து வாழக்கூடிய வாழிடங்களை நகர்ப்புறக் குடியிருப்பு

கள் என்றழைப்பர். நகர்ப்புற குடியிருப்புகள் பொதுவாக நெருங்கிய குடியிருப்புகளாகும். கிராமப்புறங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட பொருளாதார- பண்பாட்டுச் சூழல்கள் நகர்புற வாழிடங்களில் உள்ளன.

கிராமப்புற வேளாண் பொருளாதார அமைப்பிலிருந்து நகரமையமான தொழில் சார்ந்த சேவை மண்டலங்களுக்குள் ஏற்படும் மக்கட் தொகை மாற்றத்தை நகர மயமாதல் (Urbanization) என்று கூறலாம். நகரமயமாதலின் வழியாக நகர மக்கட்தொகை எப்போதும் அதிகரித்து வருகிறது.

2011 மக்கட்தொகை கணக்கெடுப்பின் படி இந்தியாவில் நகரமக்கள் தொகை 31.16% ஆகும். இந்தியாவில் பல்வேறு மாநிலங்களின் நகர மக்கட் தொகை விகித்தில் வேறுபாடு காணப்படுகிறது. 62.17% நகரமக்கட் தொகைகொண்ட கோவா முதலிடத்தில் உள்ளது. இமாச்சலபிரதேசம் கடைசியில் (10.04%). கேரளத்தின் நகர மக்கள் தொகை 47.72% ஆகும். தேசிய தலைநகரமாகிய டெல்லியில் நகரமக்கட் தொகை 97.50% ஆகும். மத்திய அரசு ஆட்சி பிரதேசங்களில் பொதுவாக உயர்ந்த மக்கட்தொகை உள்ளது.

இந்தியாவில் கீழே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி ஒரு குடியிருப்புக்கு நகரபதவி வழங்கப்படுகிறது.

- 5000 –க்கு அதிகமான மக்கட் தொகை இருக்க வேண்டும்.
- சதுரகிலோமீட்டரில் 400– க்கு அதிகமான மக்கள் அடர்த்தி இருக்க வேண்டும்.
- 75% –த்திற்கு அதிகமானோர் வேளாண்மையில்லாத பிற தொழில்களில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

மேலும் நகராட்சிகள், மாநகராட்சிகள் போன்ற ஆட்சி மையங்களையும், ராணுவ தளங்களையும் மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளைக் கணக்கிடாமல் நகரமாகக் கணக்கிடுகின்றனர்.

## மக்கட்தொகை அடிப்படையில் நகரங்களை வகைப்படுத்துதல்

இந்திய நகரங்கள் மக்கட்தொகையின் அடிப்படையில் ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அட்டவணையை உற்றுநோக்கி அது எவ்வாறு என்பதைப் புரிந்து கொள்ளுதல்.

| நகரத்தின் பதவி | மக்கட்தொகை |
|---|---|
| வகுப்பு I நகரம் | 1 இலட்சத்திற்கு கூடுதல் |
| வகுப்பு II நகரம் | 50000 - 1 இலட்சம் வரை |
| வகுப்பு III நகரம் | 20000 - 50000 வரை |
| வகுப்பு IV நகரம் | 10000 - 20000 வரை |
| வகுப்பு V நகரம் | 5000 - 10000 வரை |
| வகுப்பு VI நகரம் | 5000 –க்கு குறைவாக |

(Census 2001)

மக்கட்தொகைப் பெருக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நகரங்கள் பல்வேறு பெயர்களில் அறியப்படுகிறது.

**நகரங்கள்**

**பட்டணம் (Town)**

ஒரு இலட்சத்திற்குக் குறைவான மக்கட்தொகை கொண்ட சிறிய நகரங்கள்.




**பெரிய பட்டணம் (Megacity)**

ஏராளமான நகரங்கள் சேர்ந்து உருவாகின்ற 50 இலட்சத்திற்கதிகமான மக்கட்தொகை கொண்ட நகரம்



**நகரம் (City)**

ஒரு இலட்சத்திற்கு அதிகம் மக்கட் தொகை உடையதும் பத்து இலட்சத்திற்கு குறைவாக மக்கட் தொகை கொண்டதுமான நகரங்கள்




**பெரும்மாநகரம்(Metropolis)**

பத்து இலட்சத்திற்கு அதிகமான மக்கட் தொகை உள்ள பெரிய நகரங்கள்.



நிலப்படத்தை உற்றுநோக்கி ( படம் 8.8) இந்தியாவின் மெட்ரோபொலிட்டன் நகரங்களைப் பிரித்தறியவும்.






படம் 8.8

## சேவைகளின் அடிப்படையில் நகரங்களை வகைப்படுத்துதல்

நகரங்களை அவை வழங்கும் முக்கியமான சேவைகளின் அடிப்படையில் வகைப்படுத்தலாம். இந்தியாவில் பல்வேறு பிரிவிலுள்ள நகரங்கள் எவையென் பதை அட்டவணையிலிருந்து புரிந்துகொண்டு ஒவ்வொன்றுக்கும் கூடுதல் எடுத்துக்காட்டுகளை விவாதம் வழியாகக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

நகரங்கள்

↓

சேவைகள் /கடமைகளின் அடிப்படையில்

| ஆட்சி | தொழில்கள் | கல்வி | சுற்றுலா | மதம்/ பண்பாடு |
|---|---|---|---|---|
| ● காந்திநகர் | ● ஹூக்ளி | ● அலிகார் | ● நைனிட்டால் | ● ஹரித்துவார் |
| ● ஸ்ரீநகர் | ● கோயம்புத்தூர் | ● | ● சிம்லா | ● மதுரை |
| ● | ● | ● | ● | ● |
| ● | ● | ● | ● | ● |

## நகரங்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள்



படம் 8.9

கிராமங்களிலிருந்து நகரங்களுக்கான குடியேற்றம் பத்துமடங்காகப் பெருகியுள்ளது. பெரிய நகரங்களில் அங்கு ஏற்றுக் கொள்வதற்கு இயலாத வகையில் கூடுதல் மக்கள் வாழ்கின்றனர், நகரமயமாதல் பல பிரச்சினைகளை உருவாக்குகிறது. அவை எவையென்பதை ஆராய்வோம். படங்களைக் கவனிப்போம் படம் ( 8.9) நகரங்கள் எதிர்கொள்ளும் சிலமுக்கிய பிரச்சினைகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். இது போன்ற கூடுதல் பிரச்சினைகளைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

- சேரிகள்
- போக்குவரத்து நெரிசல்
- மாசடைதல்
- 

இந்தியா உட்பட்ட வளரும் நாடுகளில் நகரமயமாதல் அதிவேகமாக பெருகிவருகிறது. நகரமயமாதல் உருவாக்கும் பிரச்சினைகளை நீங்கள் புரிந்து கொண்டீர்களல்லவா? இவற்றை ஓரளவு கட்டுப்படுத்துவதற்கு நம்மால் இயலாதா? தீர்வு முறைகளைக் கூறுங்கள்.

- நகரங்களைத் திட்டமிடல்
- மாசுகளை அகற்றுதல்
- 

*'நகரங்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளும் தீர்வு முறைகளும் ' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்க அறிக்கை தயாரித்து வகுப்பில் வாசியுங்கள்.*



மக்கட் தொகை தொடர்பான கணக்கெடுப்பின் முக்கியத்துவத்தை இப்போது தெரிந்து கொண்டீர்கள் அல்லவா? இயற்கையும் மனிதனும் ஒன்றோடொன்றுள்ள தொடர்பைச் சீராக நிறுத்தினால் மட்டுமே மக்கள் முன்னேற்றம் ஏற்பட இயலும்.



## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- மக்கட்தொகை பரவலில் தாக்கம் செலுத்தும் காரணிகளை விளக்குதல்.
- மக்கள் அடர்த்தியின் அடிப்படையில் மாநிலங்களை வகைப்படுத்துகின்றனர்
- இந்தியாவில் உள்ள கிராமப்புறக் குடியிருப்புகளையும் நகர்ப்புறக் குடியிருப்புகளையும் ஒப்புமை செய்து வேற்றுமைகளைக் குறிப்பிடுகின்றனர்.
- பல்வேறு குடியிருப்பு மாதிரிகளைக் காட்சிப்படுத்துதல்.
- குடியேற்றத்திற்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டுபிடித்து குடியேற்றங்களை கவரும் குடியேற்றங்கள், கட்டாயக் குடியேற்றங்கள் என வகைப்படுத்துதல்.
- நகர குடியிருப்புகளின் முக்கிய பிரச்சினைகளைக் கண்டுபிடித்து தீர்வு காணும் முறைகளைக் கூறுதல்.
- இந்தியாவின் முக்கிய நகரங்களை சேவைகளின் அடிப்படையில் வகைப்படுத்தி அட்டவணைப்படுத்துதல்.



## மதிப்பிடலாம்

- மக்கட் தொகை பரவுதலில் நிலஅமைப்பிற்கு முக்கிய பங்கு உள்ளது. இந்தியாவின் மக்கட் தொகை பரவலை முன்வைத்து இந்தக் கூற்றை நிறுவவும்.
- கவரும் குடியேற்றங்களுக்குக் காரணமான காரணிகளை எடுத்துக் காட்டுடன் விளக்கவும்.

- கீழே தரப்பட்டுள்ள நகரங்களைச் சேவைகளின் அடிப்படையில் வகைப் படுத்தி அட்டவணைப்படுத்தவும்.
  - திருவனந்தபுரம்
  - வாரணாசி
  - ஹூக்ளி
  - மதுரை
  - கோயம்புத்தூர்
  - புதுடில்லி



## தொடர்செயல்பாடுகள்

- நகரங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து படங்களைச் சேக ரித்து வகுப்பில் சுவரொட்டிக் கண்காட்சி ஒழுங்கு செய்யவும்.
- 2011 மக்கட்தொகை கணக்கெடுப்பு அறிக்கையைப் பகுப்பாய்வு செய்து மக்கட்தொகை பரவல் வரைபடங்கள், நிலப்படங்கள், அட்டவணைகள் ஆகியவை தயாரிக்கவும்.




9

# பொருளாதார அமைப்புகளும் பொருளாதாரக் கொள்கைகளும்



படத்தில் கொடுக்கப்பட்டுள்ள நிலம், தொழிற்சாலை, போக்குவரத்து, தொழில்நுட்பம் போன்றவை பொருட்கள் மற்றும் சேவைகளும் உற்பத்தி செய்வதற்கும் விநியோகம் செய்வதற்கும் உள்ள சில வழிமுறைகளகும். இத்தகைய உற்பத்தி வழிமுறைகளின் உரிமை யாருக்கு என நீங்கள் சிந்தித்தி ருக்கிறீர்களா? உற்பத்தி வழிமுறைகளின் உரிமை யாருக்கு என்பதில் ஒவ்வொரு நாட்டிலும் வெவ் வேறு முறைகள் நிலைநிற்கிறது. சில நாடுகளில் உற்பத்தி வழிமுறைகளின் உரிமை தனியார்

நிறுவனங்களுக்காகும். ஆனால் வேறு சில நாடுகளில் இவை முக்கியமாக பொது உடமையாக இருக்கும். சில நாடுகளில் பொதுத்துறையினுடையவும் தனியார் துறையினுடையவும் சமமான பங்களிப்பு இருக்கும் நிலம் மூலதனம் கச் சாப்பொருட்கள் போன்ற உற்பத்திக் கூறுகளின் உரிமையின் அடிப்படையில் பொருளாதார அமைப்புகளை மூன்றாக வகைப்படுத்தலாம்




இந்தப் பொருளாதார அமைப்புகளின் சிறப்பம்சங்கள் எவையென்பதைப் பார்ப்போம்

## முதலாளித்துவ பொருளாதார அமைப்பு

உற்பத்திக் கூறுகள் தனியாருக்கு உரிமையானதும் இலாபத்தை இலக்காக வைத்து செயல்படக்கூடியதுமான பொருளாதார அமைப்பு முதலாளித்துவ பொருளாதார அமைப்பு அதன் பிற சிறப்பியல்புகள் கீழே கூறப்பட்டுள்ளது..

- உற்பத்தியாளர்களுக்கு எந்த பொருளையும் உற்பத்தி செய்வதற்கான சுதந்திரம்.
- தனியார் சொத்துரிமை
- இலாபத்தை இலக்காகக் கொண்ட செயல்பாடுகள்
- பரம்பரைச் சொத்து கைமாற்ற முறை
- விலை கட்டுப்பாடற்ற சுதந்திரமான சந்தை.
- நுகர்வோர்களின் சுதந்திரத் தன்மை
- உற்பத்திப் பொருட்களை விற்பதற்காக நிறுவனங்களுக்கிடையிலான போட்டி.

முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் பொருளாதார செயல்பாடுகளில் அர சாங்கத்தின் ஈடுபாடு மிகக் குறைவாகும். ஒழுங்கு பாதுகாப்பும், வெளிநாட்டு தாக்குதல்களை எதிர்கொள்வதும் தான் நாட்டின் முக்கிய பொறுப்பாகும் இத்த கைய நாடுகளைப் 'போலீஸ் ஸ்டேட்' என்றழைத்தனர் .

பொருளாதார அமைப்புகளின் அடிப்படைப் பிரச்சினைகளைக் குறித்து நீங் கள் முன் வகுப்பில் படித்திருக்கிறீர்கள் அல்லவா? எதை உற்பத்தி செய்ய வேண்டும்? எவ்வாறு உற்பத்தி செய்யப்படவேண்டும்? யாருக்காக உற்பத்தி செய்ய வேண்டும்? போன்ற அடிப்படை பிரச்சினைகளை முதலாளித்துவ பொரு ளாதார அமைப்பில் தீர்வு காண்பது விலை நிர்ணயம் வழியாகும்.

பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை கூடும் போது உற்பத்தியாளர்கள் உற்பத்தியைப் பெருக்கி அதிக இலாபம் உருவாக்குவதற்கு முயற்சி செய்வர். ஆனால் உற்பத்திப் பொருட்களுக்கு விலை கூடும் போது பொதுவாக வாடிக்கையாளர்கள் குறையவும், உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தியைக் குறைக்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. அதைப் போன்று பொருட்களுடையவும் சேவைகளுடையவும் விலை குறையும் போது உற்பத்தியாளர்கள் உற்பத்தியைக் குறைப்பதற்கு முயற்சி செய்வர். ஆனால் உற்பத்திப் பொருட்களுக்கு விலை குறையும் போது வாடிக்கையாளர்கள் கூடவும், உற்பத்தியாளர் உற்பத்தியைக் பெருக்கவும் செய்வார்.

இவ்வாறு விலையிலுள்ள ஏற்றத்தாழ்வுகள் உற்பத்தியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் மீது தாக்கம் செலுத்துவதன் விளைவாகப் பொருட்களும் சேவைகளும் கிடைக்கச் செய்வதைக் கட்டுப்படுத்துவது விலைநிர்ணயம் ஆகும்.

*" உற்பத்திப் பொருளின் விலை கூடும் போது உற்பத்தியாளர்கள் உற்பத்தியைப் பெருக்கவும், விலை குறையும் போது உற்பத்தியைக் குறைக்கவும் செய்வதற்கு எடுத்துக்காட்டுகள் கண்டுபிடிக்கவும்.*



முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் பல சிறப்பம்சங்களும் பிரச்சினைகளை உருவாக்குகிறது. எடுத்துக்காட்டாக தனியார் சொத்துரிமையும், பரம்பரை சொத்து கைமாற்ற முறையும் நிலைநிற்பது ஒரு சிலரிடம் செல்வம் குவிந்து விடுவதற்கு வாய்ப்பளிக்கிறது. இது சமூகத்தின் பொருளாதார இடைவெளியை பெருக்குவதற்கும் காரணமாகிறது.

*முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் சிறப்பம்சங்களைக் குறித்து விவாதித்து அதன் நன்மை தீமைகளைக் குறித்து ஒரு குறிப்பு தயாரிக்கவும்.*



முதலாளித்துவத்துக்கு தீமையும் உண்டு என்பதைப் புரிந்துகொண்டீர்கள் அல்லவா? இந்தத் தீமைகளை எதிர்கொள்வதற்காக உருவானதே சோஷியலிஸ்ட் பொருளாதார அமைப்பு

## சோஷியலிஸ்ட் பொருளாதார அமைப்பு

உற்பத்திக் கூறுகள் பொது உடைமையானதும் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமிடல் அடிப்படையில் செயல்படுவதுமான பொருளாதார அமைப்பே சோஷியலிஸ்ட் பொருளாதார அமைப்பு. இந்த அமைப்பின் பிற சிறப்பம்சங்களை ஆராய்வோம்.

- மக்கள் நலன் இலக்காகக் கொண்ட செயல்பாடு
- தனியார் நிறுவனங்கள் இல்லாமை.
- தனியார் சொத்துரிமை மற்றும் பரம்பரை சொத்துகைமாற்ற முறை இல்லை
- பொருளாதார சமத்துவம்

KT-535-5/Soc. Sci. II-9 (T) Vol-2

பொருளாதார அமைப்பின் அடிப்படை பிரச்சினைகளுக்கு சோஷியலிசத்தில் திட்டமிடல் வாயிலாகத் தீர்வு காணப்படுகிறது. எதை உற்பத்தி செய்யவேண்டும்? எப்படி உற்பத்தி செய்ய வேண்டும்? யாருக்காக உற்பத்தி செய்ய வேண்டும்? என்பதையெல்லாம் திட்டமிட்டு மக்கள் நலனை இலக்காக வைத்து உற்பத்தியும், விநியோகமும் நடைபெறுகிறது. நாட்டிற்குத் தேவையானப் பொருட்கள் மற்றும் சேவைகளின் அளவைக் கண்டுபிடித்து அதற்கேற்ப உற்பத்தியைக் கட்டுப்படுத்துகின்றனர். விலையை முன்னரே திட்டப்படுத்துவதால் விலைநிர்ணயத்திற்கு சோஷியலிஸ்ட் பொருளாதார அமைப்பில் முக்கியத்துவம் இல்லை.

சோஷியலிஸ்ட் பொருளாதார அமைப்பிலும் பிரச்சினைகள் உள்ளன. எல்லாத் துறைகளிலும் முதலீடு செய்வதற்கான பொருளாதார நிலை பொதுத்துறைக்கு குறைவாக இருக்கும். இது பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கிறது. தனியார் சொத்துரிமையும், பரம்பரை சொத்து கைமாற்ற முறையும் இல்லாதச் சூழலில் மக்கள் கூடுதல் உழைப்பதற்கான ஆர்வம் காட்ட வேண்டும் என்பதில்லை. வியாபார மையத்தில் வாடிக்கையாளர்களுக்கு உற்பத்திப் பொருட்களைத் தேர்வு செய்வதற்கான சுதந்திரம் குறைவாக இருக்கும்.



*முதலாளித்துவ பொருளாதார அமைப்பினுடையவும் சோஷியலிஸ்ட் பொருளாதார அமைப்பினுடயவும் சிறப்பியல்புகளை ஒப்பிட்டு குறிப்பு தயாரிக்கவும்.*

## கலப்பு பொருளாதார அமைப்பு

முதலாளித்துவ பொருளாதார அமைப்பினுடையவும், சோஷியலிஸ்ட் பொருளாதார அமைப்பினுடையவும் சில சிறப்பியல்புகள் சேர்ந்ததே கலப்பு பொருளாதார அமைப்பு. கலப்பு பொருளாதார அமைப்பு நிலைநிற்கும் ஒரு நாடுதான் இந்தியா. இந்தப் பொருளாதார அமைப்பின் சிறப்பியல்புகள் எவையென்பதைப் பார்ப்போம்.

- பொதுத்துறையும், தனியார்துறையும் காணப்படுகிறது.
- திட்டமிடல் அடிப்படையில் நடைபெறுகிறது.
- நலச் செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.
- தனியார் சொத்துரிமைக்கான சுதந்திரமும், பொருளாதாரக் கட்டுப்பாடும் ஒன்றுபோல் காணப்படுகிறது.



*'முதலாளித்துவ மற்றும் சோஷியலிஸ்ட் பொருளாதார அமைப்புகளின் சிறப்பம்சங்கள் கலப்பு பொருளாதார அமைப்பில் உட்பட்டுள்ளது.' கூற்றை நிறுவவும்.*

இன்று உலகில் முதலாளித்துவ பொருளாதார அமைப்பும்.சோஷியலிஸ்ட் பொருளாதார அமைப்பும் முழுமையாகப் பார்க்க இயலாது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், யுனைடெட் கிங்டம் போன்ற முதலாளித்துவ நாடுகள் அரசாங்க கட்டுப்பாடுடன் செயல்படுகிறது.. சோஷியலிஸ்ட் நாடுகளாகக் கருதப்படும் கியூபாவும், சீனாவும் தனியார் சொத்துரிமையையும் சுதந்திர வியாபாரத்தையும்

அனுமதித்துள்ளது. அதாவது நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளில் பலவகையான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

## மாறுகின்ற பொருளாதாரக் கொள்கை

பொருளாதார வளர்ச்சியை இலக்காக வைத்து பொதுவாக எல்லா நாடுகளும் தனியார் உற்பத்தி நிறுவனங்களை ஊக்குவிக்கும் முறை இப்போது கையாளப் படுகிறது. தனியார் நிறுவனங்களை அழைப்பதற்கும், வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவருவதற்கும் அரசாங்கம் முன்வருகிறது. இத்தகைய பொருளாதார கொள்கைகளின் விளைவாக நாடுகளின் எல்லைகளைக் கடந்து மூலதனத்தினுடையவும், பொருட்கள்- சேவைகள் மற்றும் தகவல் தொழில் நுட்பம் போன்றவை பெருமளவில் வந்து சேர்ந்தன. புதியதும் வேறுபட்டதுமான படைப்புகள் ஏராளம் சந்தையில் வருகிறது. எடுத்துக்காட்டாக சில மாதிரிகளில் மட்டுமே இருந்த இந்தியக் கார் சந்தையில் இன்று பல்வேறு கம்பெனிகளின் அநேக மாதிரிகளைப் பார்க்க முடிகிறது. பிற எடுத்துக்காட்டுகளை விவாதம் வழியாகக் கண்டுபிடிப் பீர்களல்லவா?.



*அலைபேசி சந்தையின் வேறுபாடு*

சக்தியான பொதுத்துறையும், கட்டுப்பாடுக்கு உட்பட்ட வெளிநாட்டு வியாபாரமும் நிலைநின்ற இந்தியாவிலும் பொருளாதாரக் கொள்கைகளில் மாற்றம் உண்டானது. கூடுதல் வெளிநாட்டு மூலதனம் கவருவதற்கும், வெளிநாட்டு வியாபாரத்தைப் பெருக்குவதற்குமான முயற்சிகள் தோன்றின. 1991- இல் தொடங்கிய இந்தக் கொள்கைமாற்றத்தின் நோக்கம் தாராளமயமாக்கல் (Liberalization), தனியார்மயமாக்கல், (Privatization), உலகமயமாக்கல் (Globalization) ஆகியவையாகும்.

## தாராளமயமாக்கல்

நாட்டின் பொருளாதாரச் செயல்பாடுகளிலுள்ள அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளையும் ஆதிக்கத்தையும் குறைப்பதே தாராளமயமாக்கலின் நோக்கம். தாராளமயமாக்கல் நடவடிக்கைகளுக்கு 1985- இல் தொடக்கமிட்டனர். கீழே கொடுக்கப்பட்டுள்ள மாற்றங்கள் தாராளமயமாக்கலின் விளைவாக நடைமுறைக்கு வந்தது.

- தொழில்கள் தொடங்குவதற்கான கட்டுப்பாடுகள் எளிமையாக்கப்பட்டது.

### வெளிநாட்டு நாணய நெருக்கடி

ஒவ்வொரு நாட்டிற்கும் வெளிநாட்டு நாணயத்தின் பாதுகாப்பு சேமிப்பு இருப்பதுண்டு. சர்வதேச வாணிபத்திற்குப் பயன்படுத்துவதற்காக அமெரிக்க டாலர், யூரோ, பவுண்ட் போன்ற நாணயங்கள் பாதுகாப்பு சேமிப்பில் அதிகமாக இருக்கும். சாதாரணமாகச் சுமார் 10–12 வார வெளிநாட்டு வாணிபத்திற்குத் தேவையான வெளிநாட்டு நாணயங்கள் பாதுகாப்பு சேமிப்பில் இருக்க வேண்டும். ஆனால் 1991– இல் இரண்டு வாரத்திற்குத் தேவையான வெளிநாட்டு நாணயம் மட்டுமே இந்தியாவிடம் இருந்தது. கூடுதல் வெளிநாட்டு கடன் வாங்குவது, வெளிநாட்டு மூலதனம் கவர்வது, வெளிநாட்டு வாணிபம் போன்ற வழிகளில் இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்தது.

- இறக்குமதி தீர்வையும் வரிகளும் குறைக்கப்பட்டன.
- வெளிநாட்டு பரிமாற்றச் சட்டங்களில் மாற்றங்கள் வந்தது.
- வணிகக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.
- அதிகமான துறைகளில் அயல்நாட்டு சேமிப்பு அனுமதிக்கப்பட்டது.
- அடிப்படை வசதிகளின் வளர்ச்சி, அடிப்படை தொழில்கள் ஆகியவற்றில் அரசாங்கத்தின் பங்களிப்பு குறைந்தது.

மட்டுமல்ல, தாராளமயமாக்கலின் பாகமாக சில துறைகளில் அரசாங்கத்தின் ஈடுபாடுகள் குறைந்தது. அத்துடன் தனியார் துறையின் முக்கியத்துவம் பெருகியது.

## தனியார்மயமாக்கல்

இந்தியாவில் 1991– க்கு பின்பு ஏராளமான பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட்டது. மாருதி உத்யோக் லிமிடெட், மாடர்ன் புட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் ஆகியவை தனியார்மயமாக்கப்பட்ட நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும். பல பொதுத்துறை நிறுவனங்களுடையவும் பங்குகள் சந்தை வழியாக விற்றுத் தீர்ந்தன. பொதுத்துறை நிறவனங்களுடைய தனியார்மயமாக்கலும் பங்குசந்தையும் செயல்படுத்துவது மத்திய அரசின் பொதுத்துறையின் கீழ் செயல்படும் டிப்பார்ட்மெண்ட் ஆப் இன்வெஸ்ட்மெண்ட் ஆகும்.

அரசாங்கத்திற்கு மட்டும் பங்களிப்பு இருந்த பல துறைகளிலும் தனியார்துறைக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சாலை, மின்சாரம், செய்தித் தொடர்பு, அடிப்படைத் தொழில்கள் ஆகியவற்றில் எல்லாம் இன்று தனியார்துறை உள்ளது.. BOT, PPP ஆகியமுறைகளில் தனியார் துறைகளின் செயல்பாடுகளைப் பார்க்க இயலும். சில புதிய துறைகளும் சந்தையில் வந்ததுடன் தனியார்மயமாக்கல் தீவிரமடைந்தது.

### BOT (Build Operate and Transfer)

சாலை, பாலம் போன்றவை தனியார் உற்பத்தியாளர்கள் உருவாக்கவும் முதலீட்டை சுங்க வரி வழியாக வசூலிக்கவும் பின்பு அவை அரசாங்கத்துக்கு கைமாறவும் செய்யப்படுகிறது.

### PPP (Public Private Partnership)

சில நிறுவனங்களை அரசாங்கமும் தனியாரும் இணைந்து தொடங்குகின்றனர். முதலீட்டிற்கு ஏற்ப இலாபத்தைப் பங்கிடுகின்றனர். கொச்சி சர்வதேச விமானநிலையம் (CIAL) இதற்கு எடுத்துக்காட்டாகும்.

முக்கிய சாலைகள் வழியாக கடந்து செல்கின்ற வாகனங்களிலிருந்து சுங்கம் வசூலிப்பதைப் பார்த்திருப்பீர்கள் அல்லவா? வசூலிப்பது யார்? எதற்காக வசூலிக்கிறார்கள்?



தேசியச்சாலையில் சுங்கச்சாவடி

## உலகமயமாக்கல்

தாராளமயமாக்கலின் தொடர்பாக வெளிநாட்டு மூலதனசேமிப்பை ஏற்படுத்துவதற்கான கட்டுப்பாடுகள் மாறியதுடன் அதிக மூலதனசேமிப்பை ஏற்படுத்துவதற்கு வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் முன் வந்தனர். அதன் விளைவாக உலகளவில் மூலதன ஒழுக்கு வலுவடைந்தது. இறக்குமதி தீர்வையும் வரிகளும் குறைப்பதற்கு நாடுகள் உருவாக்கிய சுதந்திர வாணிப ஒப்பந்தங்கள் ஏற்றுமதியையும், இறக்குமதியையும் இலகுவாக்கியது. உலகளவில் தொழிலாளிகளின் வருகையும் தொழில்நுட்ப கைமாற்றமும் பெருகியது. அத்துடன் எல்லா நாடுகளிலுமுள்ள உற்பத்திப் பொருட்களும் சேவைகளும் எல்லா வணிக மையங்களிலும் கிடைத்தது. உலகம் ஒரே வணிக மையமாக மாறும் நிலை! நட்புடன் கூடிய வணிகமைய பொருளாதாரக்கொள்கைகள் நாடுகளுக்கிடையிலான உறவுகள் வளர்வதற்கு வாய்ப்பளித்தது.


கொச்சி சர்வதேச விமான நிலையம்

நாட்டின் எல்லைகள் கடந்த மூலதன ஒழுக்கு, தொழிலாளிகளின் ஒழுக்கு, தொழில்நுட்பத்தின் கைமாற்றம், பொருட்களுடையவும், சேவைகளுடையவும் ஒழுக்கு ஆகியவற்றின் நாடுகளுக்கிடையிலான பொருளாதார உடன்பாடு மற்றும் சார்புத்தன்மை உலகமயமாக்கல் என்றறியப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் கடைசி பத்து ஆண்டுகளில் கணினி, இணையதளம், மொபைல் போன் ஆகிய துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி செய்தித் தொடர்பை இலகுவாக்கியது. சரக்குக் கப்பல்கள், விமானங்கள், புல்லட் ரயில்கள் போன்றவை போக்குவரத்து துறையின் அதிக வளர்ச்சிக்குக் காரணமானது. இந்த மாற்றங்கள் உலகமயமாக்குதலுக்கு உதவியது..



### வெளிநாட்டு மூலதன சேமிப்பு

ஒரு நாட்டின் மூலதனம் வேறொரு நாட்டின் கம்பெனிகள், நிலம், பங்குச் சந்தைகள் , பத்திரங்கள், வங்கி சேமிப்புகள் ஆகியவற்றில் சேமிப்பது வெளிநாட்டு மூலதன சேமிப்பு என்றறியப்படுகிறது.



உலகமயமாக்கல் வலுவடைந்த போது மூலதனமும், தொழில்நுட்பமும், குறைந்த பல வளரும் நாடுகளுக்கு அதன் நன்மைகளை அனுபவிக்க இயலவில்லை. எனவே அத்தகைய நாடுகள் வெளிநாட்டு மூலதன சேமிப்பைக் கவருவதற்காக அரசாங்கம் கட்டுப்பாடுகளைக் குறைப்பதற்கு முன்வந்தது. அரசாங்க கட்டுப் பாடுகளை முழுமையாக புறக்கணிக்கின்ற புதிய பொருளாதாரக் கொள்கைகள் நவீன தாராளமயமாக்கல் (Neo Liberalization) என்றழைக்கப்படுகிறது. சர்வ தேசப் பொருளாதார நிறவனங்களாகிய சர்வதேச நாணயநிதி (IMF), உலக வங்கி (World Bank) ஆகியவை உலகமயமாக்கல் கொள்கைகளைச் செயல் படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. உலக வணிக அமைப்பின் தோற்ற மும் பன்னாட்டு கம்பெனிகளின் வளர்ச்சியும் உலகமயமாக்கலுக்கு ஊக்கம் அளித்தன.

## உலக வணிக அமைப்பு

நாடுகளின் ஒருங்கிணைந்த விவாதம் வழியாக உலகவணிகத் துறையின் கட் டுப்பாடுகள் அகற்றுவதற்கான முயற்சிகள் நடைபெற்றது. 1995 ஜனவரி 1-இல் ஜெனிவாவை மையமாகக் கொண்டு உலக வணிக அமைப்பு (World Trade Organization) நடைமுறைக்கு வந்ததால் அந்த முயற்சிகள் வலுவடைந்தது. இந்த அமைப்பை நிறுவிய நாடுகளில் ஒன்றாகும் இந்தியா. 2015 ஏப் ரல் மாத கணக்கெடுப்பின்படி 161 நாடுகள் உலகவ ணிக அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளது.

WORLD TRADE ORGANIZATION

*உலக வணிக அமைப்பின் சின்னம்*

உலக வணிக அமைப்பு நடைமுறைக்கு வந்ததும் உலக வணிகத்துறையின் கட்டுப்பாடுகள் மாறியது. இந்த அமைப்பின் வழியாக உருவான சுதந்திர வாணிப ஒப்பந்தங்களின் முக்கிய விதிமுறைகள் இவையாகும்:

- இறக்குமதி வரியைப் படிப்படியாக குறைத்தல்.
- மானியங்கள் குறைத்தல்
- பேட்டன்ட் சட்டங்கள் சீரமைத்தல்.
- சேவைத்துறைகளாகிய ஊடகங்கள், டெலிகாம், வங்கிமுறை, காப்பீடு போன்ற துறைகளில் வெளிநாட்டு முதலீட்டை அனுமதித்தல்.
- உள்நாட்டு முதலீடுகளுக்கு அளிக்கும் முன்னுரிமை வெளிநாட்டு முதலீடுகளுக்கும் அளித்தல்.

இந்த கொள்கைகள் அனைத்தும் தாராளமயமாக்கலையும், உலகமயமாக்கலையும் வலுப்படுத்தியது.

### உலகவங்கியும் சர்வதேச நாணய நிதியும்

1944 -இல் பிரட்டன்வுட்ஸ் ( அமெரிக்கா) மாநாட்டின் தீர்மானத்தின் படி உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியும் நடைமுறைக்கு வந்தன. இவற்றின் தலைநகரம் வாஷிங்டன் ஆகும். பொருளாதார நெருக்கடி உள்ள நாடுகள் உதவிக்காகப் பல வேளைகளிலும் இந்த நிறுவனங்களை அணுகுகிறது. கடனுதவி கிடைப்பதற்காக அவர்கள் கூறும் வழிமுறைகளை நாடுகளுக்கு செயல்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தகைய வழிமுறைகள் அனைத்தும் உலகமயமாக்குதலை வலுவடையச் செய்பவையாகும்.

### காப்புரிமை

புதிய தொழில் நுட்பம், உற்பத்தி, உற்பத்தி முறை இவற்றில் எதையேனும் கண்டுபிடிப்பவர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு அவற்றின் உரிமையைப் பாதுகாப்பதற்காக அளிப்பதே காப்புரிமை

## பன்னாட்டு நிறுவனங்கள்

ஒரு நாட்டில் பதிவு செய்து பல்வேறு நாடுகளில் செயல்படும் நிறுவனங்கள் பன்னாட்டு நிறுவனங்கள் என்றறியப்படுகிறது. அதிகமூலதனமும், உயர்ந்த தொழில்நுட்பமும் வாய்ந்த இத்தகைய நிறுவனங்கள் நவீன தாராளமயமாக்கலை ஒரு வாய்ப்பாக நினைத்தன. உற்பத்திப் பொருட்கள் ஒரு நாட்டில் உருவாக்கி வேறொரு நாட்டில் ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக மூலதனம் வளரும் நாடுகளில் முதலீடு செய்து அங்குள்ள கச்சாப் பொருட்களும், தொழிலும், சந்தையையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதற்கு இந்தக் கம்பெனிகளால் இயன்றது.

சில பன்னாட்டு கம்பெனிகளின் விற்பனை வரவு பல சிறிய வளரும் நாடுகளின் தேசிய வருமானத்தை விட கூடுதலாக இருப்பதைக் காணலாம். நாடுகளின் உள்நாட்டுக் கொள்கைகளிலும், சட்டங்களிலும் தங்களுக்கு சாதகமான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு பன்னாட்டுக் நிறுவனங்களால் இயலுகிறது

*பன்னாட்டு நிறுவனங்கள் பிற நிறுவனங்களிலிருந்து எவ்வாறு வேறுபட்டுள்ளது? விவாதித்து குறிப்பு எழுதவும்.*

பன்னாட்டு நிறுவனங்கள் பலவேளைகளில் உள்நாட்டு நிறுவனங்களுடன் இணைந்தோ, உள்நாட்டு நிறுவனங்களை தமதாக்கியோ உற்பத்தியைத் தொடங்குகிறது. அதன் வழியாக உள்நாட்டு நிறுவனங்களின் உற்பத்தி விநி

யோக அமைப்புகள் பயன்படுத்தி உற்பத்திப்பொருட்களை வேகமாக வணிக மையங்களுக்கு கொண்டு வருவதற்கு பன்னாட்டுக் நிறுவனங்களால் முடிகிறது. உள்நாட்டு நிறுவனங்களுக்கு கூடுதல் மூலதனமும் உயர்ந்த தொழில் நுட்ப அறிவும் கிடைக்கும். வேறொரு முறையிலும் பன்னாட்டு நிறுவனங்களின் உற்பத்தியைக் கட்டுப்படுத்துகிறது. உற்பத்தியின் உருவாக்கம் உள்நாட்டு சிறுதொழில் உற்பத்தியாளர்களிடம் ஒப்படைப்பர். அவர்களிடமிருந்து கிடைக்கும் உற்பத்திப் பொருட்கள் தங்களுடைய பிராண்டின் பெயரில் விற்பனை செய்கின்றனர். ஆடைகள், செருப்புகள், விளையாட்டுப் பொருட்கள் போன்றவற்றின் உருவாக்கம் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். பலநாடுகளில் உற்பத்தி செய்யும் பகுதிகள் ஏதேனும் ஒரு நாட்டில் ஒன்றிணைக்கும் முறையும் அவர்கள் ஆராய்கின்றனர். வாகன உருவாக்கத்தில் இந்த முறையைப் பயன்படுத்துகின்றனர்.



Made in Thailand | Made in China | Made in India

*உற்பத்திப் பொருட்கள் வாங்கும் போது அவற்றில் இத்தகைய முகவரிச் சீட்டைப் பார்த்திருப்பீர்கள் அல்லவா? உண்மையிலேயே இந்த உற்பத்திப் பொருட்கள் முழுமையாக இந்த நாடுகளில் தான் உற்பத்தி செய்யப்படுகிறதா? கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் விவாதித்து குறிப்பு தயாரிக்கவும்.*

*● மூலதனம் ● கச்சாப் பொருட்கள் ●தொழில்நுட்பம் ● உற்பத்திப் பகுதிகளை இணைத்தல் ● அமைப்பாளர்*

நவீன தாராளமயமாக்கலின் கருத்துகளே வியாபாரமயமாக்கலின் உற்பத்திக்குக் காரணமானது.

## சந்தைமயமாதல்

புதிய பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக சந்தை இன்று மிக சுதந்திரமானதும், பரவலானதும் வலுவானதுமாக மாறிக்கொண்டிருக்கிறது. வாணிபத்தின் மீதுள்ள அரசின் கட்டுப்பாடு அகன்று கொண்டிருக்கிறது. அடிப்படை வசதிகளின் வளர்ச்சி, அடிப்படைத் தொழில்கள், வங்கிமுறை, காப்பீடு போன்ற பல துறைகளும் வாணிபத்தின் எல்லைக்குள் வந்தன. அரசாங்கத்திற்குச் சொந்தமான பல நிறுவனங்களும் தனியார்மயமாகி சந்தையின் பாகமாக மாறியது. எல்லாம் சந்தையில் கிடைக்கும். அல்லது சந்தையில் மட்டுமே கிடைக்கும் என்ற முறையில் நிலைமை மாறியுள்ளது. இந்த நிலைமை சந்தைமயமாதல் என்றறியப்படுகிறது. சந்தைமயமாதலின் முக்கிய இலக்கு என்பது இலாபமாகும்.

### புதிய பொருளாதாரக் கொள்கைக்குச் சாதகமானதும் எதிரானதுமான கருத்துகள்

புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்குச் சாதகமானதும் எதிரானதுமான ஏராளம் கருத்துகள் எழும்பியுள்ளன. அவற்றைக் குறித்துப் பார்ப்போம்.

சாதகமான கருத்துகள்

- வேறுபட்ட உற்பத்திப் பொருட்கள் சந்தையில் கிடைக்கிறது.
- சிறந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த இயலுகிறது.
- போட்டி பெருகுவது விலை குறைவிற்கு காரணமாகிறது.
- ஏற்றுமதி பெருகுகிறது.
- கம்பெனிகளுக்கு வெளிநாட்டுச் சந்தைகளில் நுழைய முடிகிறது
- கூடுதல் நிறுவனங்கள்/ கம்பெனிகள் தொடங்குவது வேலை வாய்ப்பு களை உருவாக்குகிறது.
- தேசிய வருமானம் பெருகுகிறது

எதிர்க் கருத்துகள்

- பொருளாதார சமத்துவமின்மை பெருகுகிறது
- இயற்கை வளங்கள் அதிகமாகச் சுரண்டப்படுகிறது.
- இறக்குமதி உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் விலை வீழ்ச்சிக்குக் காரணமாகிறது.
- பொருளாதார அமைப்பைக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் திறமை குறைகிறது
- வேலையில் பாதுகாப்புத் தன்மை குறைகிறது
- பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்குவது எதிர்காலத்தில் அரசு வருமானம் குறைவதற்குக் காரணமாகிறது.

*முதியவர்களிடம் விசாரித்து சந்தை அன்றும் இன்றும் என்ற குறிப்பு தயாரிக்கவும். குறிப்பு- தேவைகள்,உற்பத்தி வேறுபாடு, விலை, வெளிநாட்டு உற்பத்திப் பொருட்கள்.*





## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- உற்பத்திக் கூறுகளின் உரிமையின் அடிப்படையில் பொருளாதார அமைப்பை வகைப்படுத்துதல்.
- முதலாளித்துவ, சோஷியலிஸ்ட், கலப்பு பொருளாதார அமைப்புகளின் சிறப்பம்சங்களைப் பகுத்தறிந்து அட்டவணைப்படுத்துதல்.
- தாராளமயமாக்கலின் பகுதியாக இந்தியா கைக்கொண்ட நடவடிக்கை களை விளக்குதல்.
- உலகமயமாக்கல் என்ன என்பதைப் புரிந்து விளக்குதல்.
- உலக வணிக அமைப்புகளின் உருவாக்கம் தாராளமயமாக்கலுக்கு எவ் வாறு உதவுகிறது என விவரித்தல்.
- பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாடுகளைப் பகுப்பாய்வு செய்தல்.

- உலகமயமாக்கலின் நன்மை, தீமைகளை ஒப்புமைப்படுத்துதல்.
- சந்தைமயமாதலின் ஆழத்தைப் பிரித்தறிதல்.



## மதிப்பிடலாம்

- முதலாளித்துவ பொருளாதார அமைப்பு சந்தை பொருளாதார அமைப்பு என அழைக்கப்பட காரணம் என்ன?
- “திட்டமிடலே சோஷியலிசத்தின் முக்கிய சிறப்பம்சம்” தெளிவுபடுத்துக.
- “இன்று உலகில் முதலாளித்துவ பொருளாதார அமைப்பும் சோஷியலிஸ்ட் பொருளாதார அமைப்பும முழுமையான வகையில் பார்க்க இயலவில்லை” கூற்றை நிறுவவும்
- இந்தியாவின் தாராளமயமாக்கலின் பகுதியாக அரசாங்கம் கையாண்ட நடவடிக்கைகளை அட்டவணைப்படுத்தவும்.
- பன்னாட்டுக் நிறுவனங்களின் செயல்பாடுகளைக் குறித்து குறிப்பு தயாரிக்கவும்.
- உலகமயமாக்கல் கொள்கைகளை நீங்கள் ஏற்றுகொள்கின்றீர்களா? தெளிவுபடுத்தவும்.



## தொடர்செயல்பாடுகள்

- தாராளமயமாக்கல் கொள்கைகளைக் காந்தியடிகளின் பொருளாதாரவியல் சிந்தனைகளுடன் ஒப்பிட்டு குறிப்பு தயாரிக்கவும்.
- பன்னாட்டு நிறுவனமாக மாறிய ஏதேனும் இந்திய நிறுவனம் உள்ளதா? இணையதளத்தின் உதவியுடன் தகவல் சேகரிக்கவும்.

## Notes

# Notes

## Notes

## Notes

## Notes

## Notes